








இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416 – 752 – 1524







29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1529
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday July 25, 2025










# "செம்மணி புதைகுழி விவகாரத்தை வீச்சாக உலகின் பார்வைக்கும் காதுகளுக்கும் கூட்டாக எடுத்துச் சென்றால் இலங்கை அரசின் இனப்படுகொலையாளர்களின் முகத்திரைகளை கிழித்தெறியலாம்"

## எதிர்வரும் சனிக்கிழமை 26ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சிக் கூட்டம் தொடர்பான விளக்கமளிப்பு சந்திப்பில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி தெரிவிப்பு



" தற்போது எம் தமிழ் மக்கள் மத்தியில் எரியும் பிரச்சனையாகவும் நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டிய ஒரு எமது கடமையாகவும் உள்ள செம்மணி புதைகுழி விவகாரத்தை நாம் எவ்வளவு வீச்சாக உலகின் பார்வைக்கும் காதுகளுக்கும் கூட்டாக எடுத்துச் செல்கின்றோமோ அந்தளவிற்கு இலங்கை அரசின் இனப்படுகொலையாளர்களின் முகத்திரைகளை கிழித்தெறியலாம்.

இவ்வாறு கனடாவில் இயங்கிவரும் **BEHIND ME FOUNDATION** என்னும் மனித நேய அமைப்பானது எதிர்வரும் சனிக்கிழமை 26ம் திகதி ஸ்காபுறோ **ALBERT CAMPBELL SQUARE** திறந்த வெளி அரங்கில் ஏற்பாடு செய்துள்ள "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சிக் கூட்டம் தொடர்பான விளக்கமளிப்பு சந்திப்பில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தினை சீர்குலைக்கும் "குழப்பவாதிகள்" ஐரோப்பாவிலும் புகுந்துள்ளனரா?

## அவதானமாகச் செயற்படுமாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் அவர்களின் வேண்டுகோள்



யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு நிறுவப்பெற்று தற்போது தனது நேர்த்தியான செயற்பாடுகளாலும் உலகெங்கும் பல நாடுகளிலும் கிளைகளை நிறுவி செயற்படும் உன்னத பணிகளினாலும் சிறப்பான தலைமைத்துவத்தைக் கொண்டும் கனடாவில் தலைமையகமாகக் கொண்டியங்கும் "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க"த்தின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் "குழப்பவாதிகள்" ஐரோப்பிய நாடுகளுக்கும் புகுந்துள்ளனரா என்ற கேள்வியை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இயக்குனர் சபையினர் தற்போது எழுப்பியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தனது குறிப்பிட்டுள்ள மூவரோடும் மேலும் சிலரும் சேர்ந்து இந்த தீய செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதை எமது தலைமைப்பீடம் கண்டிக்கின்றது." என்றும் தெரிவித்துள்ளார்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
ESTD 1974











சரவணா பவன் சைவ உணவக
ஸ்காபுறோ கிளையில் 30 பேருக்கு மேற்படாமல்
உங்கள் விசேட கொண்டாட்டங்களை நடத்தலாம்
We Celebrate your
Special Day
at Scarborough
Saravanaa Bhavan.
கனடாவில் நான்கு கிளைகளைக் கொண்டியங்கும் சரவணா பவன் சைவ உணவகத்தின்
ஸ்காபுறோ கிளையில் இப்பொழுது 30 பேருக்கு மேற்படாமல்
உங்கள் விசேட கொண்டாட்டங்களை நடத்தலாம்.
வாரத்தில் திங்கட்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரையான நான்கு நாட்கள்
மட்டுமே இவ்வாறான கொண்டாட்டங்களை நடத்த முடியும்.
சிறப்பு உணவு வகைகளுக்கும் நீங்கள் ஆடர் செய்யலாம்.
Monday to Thursday | Maximum of 30 People
மேலதிக விபரங்களுக்கு:
+1 (437) 603-7755
என்னும் இலக்கத்தை அழைக்கவும்
*Conditions apply
HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




உதயன் கதிரோட்டம்

## செம்மணியில் உயிரற்று உறங்கிய எம் உறவுகள் எலும்புகளாய் எழுந்துள்ளார்கள்

வளங்கள் பல நிறைந்த இலங்கை என்னும் மாங்கனித்தீவின் மகிமையை நன்கு உணர்ந்த பிரித்தானியர்கள் முழு நாட்டையும் ஆண்டது மாத்திரமன்றி அதனை அபிவிருத்தி செய்ததோடல்லாமல் அதன் பலனை நன்கு அனுபவித்து எமது வளங்களையும் சூறையாடிச் சென்றார்கள். இவ்வாறாக இயற்கையின் வனப்பும் வளங்களும் அதிகளவில் உள்ள அந்த கடல் சூழ்ந்த மண்ணை இனவாதம் என்னும் பேய்கள் தின்றழிக்க முனைந்தன. அதற்கு அரசியல் அதிகாரத்தில் அமர்ந்தவர்களும் துணையாக நின்றார்கள்.

உலகின் பல நாட்டு மக்கள் இலங்கையின் மலைநாடுகளில் உற்பத்தியான தேயிலைச் சாயத்தின் சுவையை ருசித்து அருந்தத் துடித்து நின்ற நேரத்தில் அங்கு தமிழர்களின் இரத்ததைத் “குடிக்க“ இலங்கையின் இனவாதிகள் துடித்தார்கள். தமிழ் மக்களின் கல்வித் தேடல், வர்த்தகத்துறையில் வெற்றி மற்றும் அரச உயர் பதவிகளை அலங்கரித்த வண்ணங்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழர்களை “எதிரிகளாகப் பார்த்த காலம் ஒன்று தோன்றியது.

அன்றிலிருந்து எமது தமிழ் மக்கள் பல நூற்றுக்கணக்கான தடவைகள் சிங்கள அரசுகளாலும் அவற்றின் காடையர்களாலும் அத்துடன் அரச பயங்கரவாதிகளான இராணுவம் மற்றும் பொலிஸ் படையினராலும் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் உடமைகள் சூறையாடப்பட்டும் எம்மவர்கள் பார்வைகள் விரிந்தும் விசமத்தோடும் அதிகரித்தன.

இவ்வாறாக அரை நூற்றாண்டு மேலாக ஆற்றல் மிகுந்த இனமாகத் திகழ்ந்த எமது ஈழத்தமிழ் மக்கள் தமிழர்கள் என்ற காரணத்தால் கொலை நோக்கத்தோடு குறி வைக்கப்பட்டார்கள். எனவே அந்த தாக்குதல்களை எதிர்த்து எமது இளைஞர்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பெற்ற போது அந்தக் கொடியர்கள் திகைத்து நின்றார்கள். இதனால் எங்கள் மண்ணில் இரத்த ஆறு ஓடத்தொடங்கியது.அதன் விளைவாக எம்மவர்கள் ஆயிரக்கணக்கில் கடத்தப்பட்டும் கொல்லப்பட்டும் புதைக்கப்பட்டார்கள். எனினும் எத்தனை ஆண்டுகள் அரசின் காடையர்களால் கடத்தப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடித் தேடி அலைந்தனர் அவர்களைப் பெற்றவர்களும் கூடப் பிறந்தவர்களும். பெரும்பான்மை இனத்தின் அரசியல்வாதிகள் அவர்களின் கோரிக்கைகளை புறக்கணித்தார்கள். காணாமற்போனவர்கள் தொடர்பாக எவ்வித அக்கறை இல்லாதவர்கள் ஆட்சியில் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப் போலவோ எமது தமிழ் மமக்கள் வாக்களித்து பாராளுமன்ற அனுப்பி வைத்த எமது தலைவர்கள் காணாமற்போனவர்கள் உறவுகள் அவர்களின் உதவிகள் கேட்டுச் சென்ற போது எமது மக்கள் பிரதிநிதிகளாலேயே உதாசீனம் செய்யப்பட்டார்கள்.

இன்று எமது உறவுகள் தேடித் தேடி நாட்களை கழித்தவர்களின் கிட்டிய கொடிய எதுவென்றால் ஒவ்வொன்றாக புகைகுழிகளிலிருந்து எழுந்து வருகின்றார்கள் எம் உறவுகள் தசையும் இரத்தமும் மண்ணோடு கரைந்து போக. எலும்புகளால் எழுந்து வருகின்றார்கள்.

நாம் எம்மவர்களின் எலும்புகளை ஒரு காட்சிப் பொருளாகப் பார்க்கக்கூடாது என்பதை நாம் உணரவேண்டும். அவற்றை எமது மரியாதையோடு எடுத்து இனப்படுகொலையாளர்களின் ஈனச் செயல்களுக்கு எதிராக நீதி கேட்டுப் போராட வேண்டும். கனடாவில் மாத்திரமல்ல, உலகெங்கும் உள்ள எம்மவர்கள் அனைவரும் தொடர்ந்து வரும் போராட்டங்களில் கூட்டமாகப் பங்கெடுக்க வேண்டும்!




Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

Space for Rent

நடனம் பயில்வதற்கு வாடகைக்கு இடம் உண்டு.
(பழைய தமிழ்ப் பூங்கா இருந்த இடம் - மார்க்கம்)
5 வயதிற்கு மேற்பட்டோருக்கான இசை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
(ஓகன், கிற்றார், றம்) ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்
**Raj** - (416) 454-1893

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வர்த்தமானி அறிவிப்பு செய்யாமல் "வாயால் விடுவிக்கப்பட்ட" வடக்கின் காணிக்குள் நுழைய தமிழர்களுக்குத் தடை




யாழ்ப்பாண, மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பரம்பரை காணிகளை அரசாங்கம் விடுவித்ததாக தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதிகளும் தெரிவித்த அறிக்கைகள் வெறும் "அரசியல் வாக்குறுதிகள்" என்பது தெரியவந்துள்ளது.

12 வருடங்களுக்கு முன்னர் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை கையகப் படுத்தும் வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் இதுவரை இரத்து செய்யவில்லை எனவும், அந்த காணிகளில் நுழையும் உரிமையை தொடர்ந்து கட்டுப்படுத்தி வருவதாகவும், வலிகாமம் பகுதியில் உள்ள காணிகளுக்கு உரிமை கோரும் மக்களும், சிவில் சமூக ஆர்வலரும் யாழ்ப்பாணத்தில் ஒரு ஊடக சந்திப்பை நடத்தி வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் கையகப்படுத்திய தமது பரம்பரை காணியை விடுவிக்கக் கோரி, யாழ். வலிகாமத்தில் காணியை இழந்த 100ற்கும் மேற்பட்டோர், ஜூலை 15 ஆம் திகதி காலை ஜனாதிபதி செயலகம் அருகே அமைதி போராட்டத்தை நடத்தினர்.

சிவில் சமூகக் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தின் முக்கிய முழக்கம் "எங்கள் முன்னோர் காணியை எங்களுக்குத் திருப்பித் தா" என்பதாகும்.

போராட்டத்தில் இணைந்த வலிகாமம் பகுதியைச் சேர்ந்த நிலமற்ற மக்கள், ஜூலை 21ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபனை சந்தித்து, தமது காணியை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினர்.

மாவட்டச் செயலாளருடனான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், யாழ்ப்பாணத்தில் ஊடகச் சந்திப்பை நடத்திய வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணை அமைப்பாளர் யாட்சன் பிகிராடோ, தமிழ் மக்களின் 6,000 ஏக்கருக்கும் அதிகமான காணியை கையகப்படுத்தி 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் இன்னும் இரத்து செய்யவில்லை என்பதை வெளிப்படுத்தினார்.



"2013 மே 28 அன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது 6,317 ஏக்கர் காணி. இந்த கெசட் நடைமுறையில் இருக்கும்போது கடந்த காலத்தில் இங்கு வரும் ஜனாதிபதிகள், தற்போதைய ஜனாதிபதியாக இருக்கலாம் நாங்கள் காணி 200 ஏக்கரை விடுவிக்கின்றோம், 300 ஏக்கரை விடுவிக்கின்றோம், பாதையை திறந்திருக்கின்றோம் எனச் சொல்வது அனைத்தும் சட்டத்திற்கு உட்பட்டவை அல்ல. இந்த கெசட் இன்னும் நடைமுறையில் இருக்கிறது. காணிகள் விடுவிக்கப் பட்டாலும் அவை சட்ட ரீதியாக இன்னமும் விடுவிக்கப் படவில்லை என்பதை நாங்கள் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியதோடு மாவட்ட செயலாளருக்கும் இந்த விடயத்தை தெளிவுபடுத்தினோம்."

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது பதவிக் காலத்தில், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1812/10ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை, மே 28, 2013 அன்று வெளியிட்ட அப்போதைய காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர், பொது நோக்கத்திற்காக காணி அவசியம் எனக் கூறி, வலிகாம் பகுதியில் ஆறாயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணியை கையகப்படுத்தப்படுவதாக அறிவித்தார்.

"கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப் படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்."

கையகப்படுத்தப்பட வேண்டிய காணியின் அளவு சிங்களம் மற்றும் தமிழில் 6,371 ஏக்கர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, எனினும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் நிலம் 6,317 ஏக்கர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில், காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, வீமன்காமம் தெற்கு, தையிட்டி தெற்கு, பலாலி தெற்கு, ஒட்டாபுலம், வளலாய் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.04.24 ஆம் திகதிய வைஏ/ரீஎல்எல்/2013/111 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 1 தொடக்கம் 72 வரை காட்டப்பட்ட சுமார் 2,578.4475 ஹெக்டயர்ஸ் (6,371 ஏக்கர், 01 றூட், 15 பேர்ச்சஸ்) முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு: வடக்கு: இந்து சமுத்திரம் கிழக்கு: மண்ணினால் அமைக்கப்பட்ட அணைக்கரை தெற்கு: மண்ணினால் அமைக்கப்பட்ட அணைக்கரை மேற்கு: இலங்கைத் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணி, சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி மற்றும் மண்ணினால் அமைக்கப்பட்ட அணைக்கரை."

ஜூலை 15 அன்று, ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் நடைபெற்ற அமைதிப் போராட்டத்திற்குப் பின்னர், ஜனாதிபதி செயலகத்தின் செயலாளரை சந்தித்ததாகவும், குறைந்தபட்சம் பல ஆண்டுகளாக காணி உரிமைக்காக போராடி வரும் தனது கிராமத்தின் பெயரைக்கூட அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை என, ஜூலை 21ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனுடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட வலிகாமம் வடக்கு காணி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜோசப் அல்பர்ட் அலோசியஸ் தெரிவித்தார்.

"வலி வடக்கு என்ற ஒரு இடம் இருப்பதே ஜனாதிபதி செயலகத்தின் செயலாளருக்கு தெரியாமல் இருக்கிறது. இங்கு எங்களிடமிருந்து அரச அதிகாரிகள் கவனயீனமாக அறிவிக்கவில்லையோ, அல்லது வேண்டுமென்றோ தெரியாது. ஆவணங்களை அவர்கள் சமர்ப்பிக்கவில்லை. அவர்களுக்கு வலி வடக்கு யாழ்ப்பாணத்தில் எங்கே இருக்கு? என்ன பிரச்சினை என்பது தெரியாது. 2013ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டும் அது அவர்களுக்குத் தெரியவில்லை. அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை."


2013 ஆம் ஆண்டு அதிவிசேட வர்த்தமானி மூலம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் 6,000 ஏக்கருக்கும் அதிகமான காணியில், 2,800 ஏக்கரைத் தவிர, மீதமுள்ளவை அவ்வப்போது விடுவிக்கப்பட்டுள்ளன, ஆனால் நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட வர்த்தமானி இன்னும் இரத்து செய்யப்படாததால், விடுவிக்கப்பட்ட காணிகளும் இன்றுவரை அரச காணிகளாகவே உள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

"6300 ஏக்கர் காணியில் 2800 ஏக்கர் இன்னும் விடுவிக்கப் படவில்லை. விடுவிக்கப்பட்ட காணியும் அரச காணியாகவே இருக்கிறது. வர்த்தமானி அறிவித்தல் சட்ட ரீதியாக விடுவிக்கப்படும் வரையில் அந்த காணி அனைத்தும் அரச காணியாகவே இருக்கும். அந்த வர்த்தமானி அறிவித்தல் நீக்கப்பட வேண்டும். எங்களுடைய தனியார் காணி விடுவிக்கப்பட வேண்டும்.."

அத்தகைய சூழ்நிலையில் தமது காணிக்குள் நுழைந்து குறைந்தபட்சம் விவசாயத்தில் ஈடுபடுவதுகூட சாத்தியமில்லை எனக் கூறும், ஜோசப் அல்பர்ட் அலோசியஸ், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் கூட காணிப் பிரச்சினைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என வலியுறுத்தினார்.

Tamilthakaval.org

ஒரு இலவச சேவை -- A Free Service



இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத்
துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.
மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.
செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.
மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# கனடவில் தலைமையகமாகக் கொண்ட "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க"த்தின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் "குழப்பவாதிகள்" ஐரோப்பிய நாடுகளுக்கும் புகுந்துள்ளனரா?

## அவதானமாகச் செயற்படுமாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களின் அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு நிறுவப்பெற்று தற்போது தனது நேர்த்தியான செயற்பாடுகளாலும் உலகெங்கும் பல நாடுகளிலும் கிளைகளை நிறுவி செயற்படும் உன்னத பணிகளினாலும் சிறப்பான தலைமைத்துவத்தைக் கொண்டும் கனடாவில் தலைமையகமாகக் கொண்டியங்கும் "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க"த்தின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் "குழப்பவாதிகள்" ஐரோப்பிய நாடுகளுக்கும் புகுந்துள்ளனரா என்ற கேள்வியை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இயக்குனர் சபையினர் தற்போது எழுப்பியுள்ளனர்.

குறிப்பாக எமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தோடு இணைந்து செயற்பட்டு வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பஞ்ச் ராமலிங்கம், ஜேர்மனியில் வாழ்பவரும் மறைந்த இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் சகோதரருமான தங்கராஜா மற்றும் மறைந்த முன்னாள் இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகி இறந்தவரும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் புதல்வருரும் தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்து வருபவருமான அமிர்தலிங்கம் பகிரதன் ஆகியோரே இவ்வாறான குழப்பவாதிகளாக இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் தொடர்ச்சியாக எமது இயக்கத்தின் இலட்ச்சினையையும் பெயரையும் சட்டவிரோதமாகப் பாவித்தும் தற்புகழ்ச்சியை தேடிக் கொள்ளும் வகையிலும் செயற்பட்டு வருகின்றார்கள். இவ்வாறான சட்ட விரோதச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு எமது புனிதமான இயக்கத்தின் பெயருக்கும் அதன் வளர்ச்சிக்கும் பங்கம் விளைவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வரும் இந்த "குழப்பவாதக் கும்பல்" தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் தங்கள் "கைவரிசையை"க் காட்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.



மேற்படி பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மூவரோடும் மேலும் சிலரும் சேர்ந்து இந்த தீய செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதை எமது தலைமைப்பீடம் கண்டிக்கின்றது.

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ள அதேவேளை தமிழ் மக்களையும் அறிஞர் பெருமக்களையும் அவதானமாகச் செயற்படுமாறு மிகவும் வினயமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் மேற்படி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

"கடந்த 45 வருடங்களாக சிறப்பான முறையில் இதயசுத்தியோடு இயங்கிய இயக்குனர் சபையைக் கொண்ட எமது இயக்கத்தை தவறான முறையில் தங்கள் கைகளுகுள் எடுத்து அதன் மூலம் சில நாடுகளில் வாழும் பரவலர்கள் சிலரிடம் நிதியைச் சேகரித்தும் சிறியளவில் மாநாடுகள் என்ற பெயரில் தங்கள் சுயபுகழ்பாடுவதுமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் மேற்படி "குழப்பவாதிகளின் கும்பல்" தற்பொழுது தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தங்கள் "கைவரிசைகளை"க் காட்டத் தொடங்கியுள்ளார்கள். இதனால் எமது உண்மையான இயக்குனர் சபை தனது பணிகளை தொடர்ந்து ஆற்றுவதில் தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே மேற்படி குழப்பவாதிகளை இனங்கண்டு ஒதுக்கும் நடவடிக்கைகளை ஆங்காங்கே உள்ள தமிழ் அறிஞர்களும் பண்பாட்டு விரும்பிகளும் கல்வியாளர்களும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்" என்று உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் உலகத் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# கறுப்பு யூலைக்கு பொறுப்புக்கூறலை மடைமாற்றும் ஜே.வி.பி.யின் செயற்பாடே சகோதரத்துவ தினம்

– தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட படுகொலைகள் நடைபெற்றன என்ற உண்மையையும் அநீதிகளுக்கு பொறுப்புக் கூறவேண்டும் என்ற கடப்பாட்டினையும் மூடி மறைக்கும் செயலாகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடிப்படையான ஜே.வி.பியின் உத்தியோகபூர்வ இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் சங்கம் சகோதரத்துவ நாளாக கறுப்பு யூலை நிகழ்வுகளை மடைமாற்றும் செய்ய எத்தனிக்கின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேடியழிக்கப்பட்ட கறுப்பு யூலை நினைவுகளின் 42 ஆவது ஆண்டினை உணர்வுபூர்வமாக எமது இனம் அனுஸ்டிக்கின்றது. கடந்த 42 ஆண்டுகளுக்கு முன் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்ட 54 அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறையில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்களை வாக்காளர் பட்டியலுடன் தேடிச் சென்று மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களை உயிருடன் தீயில் இட்டும் இதர கொடூரங்களுக்குள்ளாகவும் கொன்றழித்தனர். ஒன்றரை இலட்சம் பேர் வீடற்றவர் ஆயினர். 8 ஆயிரம் வீடுகளும் 5 ஆயிரம் வணிக நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டன. அழிக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில் 300 மில்லியன் டெலர்கள் அழிக்கப்பட்டன. இதனை பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் தமிழருக்கு எதிரான திட்டமிட்ட இனப் படுகொலை என விபரித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. இவ் இனப்படுகொலையை அரச இயந்திரமே தகவமைத்து வழிப்படுத்தியது என்பதற்கு சகல ஆதாரங்களும் உள்ளன.




இவ்வாறாக நாட்டில் இனப்படுகொலை நடைபெற்றமைக்கு பொறுப்புக் கூறல் எதையும் முன்வைக்காமல் அத் தேவையினை போர்த்திமூடிவிடும் உத்தியுடன் இன்றைய அரசாங்கம் நிதானமாகச் செயற்படுகின்றது. இப்படுகொலைகளுக்கு ஜே.வி.பியும் பொறுப்புடையது. ஆதலால் அரசாங்கத்தின் மாணவர் அமைப்பான ஜே.வி.பி தலைமைச் செயலகத்திற்குள்ளேயே இயங்கும் உத்தியோகபூர்வ இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் அமைப்பு ஊடாக அரச அனுசரணையுடன் இன்றைய நாளை சகோதரத்துவ நாள் பிரகடனப்படுத்தப்படுகின்றது. இதற்காக யாழில் அரச வளங்கள் ஈடுபடுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையினையும் அதற்கான பொறுப்புக்கூறலையும் திட்டமிட்டு மறைக்கின்ற இல்லாமலாக்குகின்ற முயற்சியாகும். இதனை நாம் கண்டிக்கின்றோம். ராஜபக்சாக்களை ஒத்ததாக இன்றைய அரசாங்கம் மென்வலு அணுகுமுறையில் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்ற வழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம்.

# உள்ளூராட்சி கதிரைகள் நிரப்பி முடிந்தது. இனியாவது கொள்கை ரீதியான கூட்டுக்கு வாருங்கள் – தமிழரசுக்கு கஜேந்திரகுமார் மீண்டும் அழைப்பு!

உள்ளூர் ஆட்சி மன்ற கதிரைகள் நிரப்பி முடிந்த நிலையில் இனியாவது மக்களுக்காக அரசியல் கூட்டை தவிர்த்து கொள்கை ரீதியான கூட்டுக்கு தமிழரசு கட்சி வர வேண்டுமென அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்தார்.

19ம் திகதி அன்றையதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஊடகவியலாளர்களுடன் சமகால விடயம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஒரே நிலைப்பாட்டில் உள்ள தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என விரும்பினோம் அதற்காக பல விட்டுக்கொடுப்புகளையும் மேற்கொண்டோம்.

ஆனால் துரதிஷ்டம் தமிழரசு கட்சி அதனை ஏற்க அதன் நிலையில் அறுதிப் பெரும்பான்மையுடன் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை எந்த ஒரு கட்சியும் உறுதிப்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டது. நாங்கள் உள்ளூராட்சி மன்றங்களில் கதிரைகளுக்காக யாருடனும் சண்டை பிடித்தது கிடையாது.

தமிழரசு கட்சிக்கு, நீங்கள் பெரும்பான்மை பெற்ற சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு நாம் ஆதரவை வழங்குவோம் அதையும் தாண்டி தேவை ஏற்பட்டால் வேறு சபைகளிலும் ஆட்சி அமைக்க விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்வோம் என பகிரங்கமாக கூறினோம்.

ஆனாலும் தமிழரசு கட்சி அதை பொருட்படுத்தாது ஒன்றிணைவுக்கு மறுத்த நிலையில் தமிழ் மக்கள் பேரவை மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் நாம் பல சபைகளில் ஒன்று இணைந்து ஆட்சி அமைத்தோம்.

இந்த இணைவு தொடர வேண்டும் என்பதே எனது நிலைப்பாட இருக்கின்ற நிலையில் அரசியல் நீதியான இணக்கப்பாட்டினை தாண்டி தமிழ் மக்களின் கொள்கைக்கான ஒரு இணக்கப்பாடாக தமிழரசு கட்சியும் இணைந்து கொள்ள வேண்டும்.

தமிழரசின் பதில் தலைவர் சி வி கே சிவஞானத்தை நான் தேடி சென்று ஓராணியில் செயல்படுவதற்காகன அழைப்பை விடுத்த போது வர இருக்கின்ற ஏக்கிய ராஜ்சிய ஒற்றையாட்ச்சி அரசியலமைப்பை தான் நிராகரிப்பதாக தெரிவித்தார்.

ஆனால் அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கிய போதும் உள்ளூராட்சி மன்ற ஒற்றுமை கூட்டுக்குள் அவர்கள் வரவில்லை.

அப்போது தன் தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார் ஏக்கிய ராஜ்ய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் தமிழரசு கட்சிக்கு அதிக பங்கு இருந்தது.

நீங்கள் உள்ளூராட்சி இணைக்கப்பாட்டில் ஏக்கிய ராஜ்யவை நிராகரிப்போம் என கூறிய நிலையில் நாங்கள் கொண்டு வந்ததை நாங்களே வேண்டாம் என கையெழுத்து வடுவதா என்ற குழப்பத்தில் நிராகரித்து இருக்கக் கூடும் என தெரிவித்தார்.

அப்போது நான் தெரிவித்தேன் சரி பரவாயில்லை இணக்கப்பாட்டுக்கு வாருங்கள் ஏதாவது இரகசியமான முறையில் சில விடயங்களை பாதுகாக்க வேண்டுமானாலும் அதை நான் செய்வதற்கு தயாராக இருக்கிறேன் வாருங்கள் என்றேன் வரவில்லை.

மீண்டும் தமிழரசு கட்சிக்கு அழைப்பு விடுவதற்கான காரணம் தனியாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது அதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

தமிழ் மக்கள் இறுதி யுத்தத்தில் இடம் பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போர் குற்றங்களுக்கு எதிராக சர்வதேச விசாரணையை கோரி ஜெனிவாவை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் ஜெனிவாவில் நமது பிரச்சனை குறுக்கப்பட்டு உள்ளக விசாரணையில் நீதியை பெறுவதற்கான அழுத்தங்கள் பிரியோகிக்கப்பட்டு வருகிறது.



இவற்றை நாம் சரி செய்ய வேண்டுமானால் எல்லோரும் ஓரணியாக நின்று எமது பிரச்சனைகளுக்கான தீர்வுகளை எட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் மூடி மறைக்கப்பட்ட செம்மணி விவகாரம் இனப்படுகொலை இடம்பெற்றதற்கான ஆதாரங்களை முன்வைத்த வண்ணம் இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் 15 பேர் மட்டும் கொல்லப்பட்டதாக மூடி மறைக்கப்பட்ட செம்மணி தமிழினத்திற்கு 2009 க்கு முன்னர் இனப்படுகொலை செய்ததற்கான தொடர்ச்சியான ஆதாரங்களை தந்து கொண்டிருக்கிறது.

இந்த செம்மணி விவகாரத்தை தனியாக விட்டுச் செல்ல முடியாது யுத்தத்துக்கு பின்னர் இடம்பெற்ற இனப்படுகொலைகள் மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் ஐநாவில் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் செம்மணியையும் இணைத்து சர்வதேச நீதிக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இதனை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தமிழ் மக்களுக்காக ஓரணியில் பயணிக்கின்ற ஒரு கொள்கையின் கீழ் ஒன்று படக்கூடிய கட்சிகளை இணைத்து பயணிப்பதே எமது சர்வதேசத்துடனான போராட்டத்தை வலுப்படுத்தும்.

தமிழரசு கட்சி எம்மோடு இணைந்து பணியாற்றுவதில் என்ன பிரச்சனை இருக்கிறது என்பது தொடர்பில் வெளிப்படையாக கேட்க விரும்புகிறேன்.

நாங்கள் ஒரு ஆசனத்தை கொண்ட கட்சி தமிழரசு கட்சி அதிக ஆசனங்களை பாராளுமன்றத்தில் கொண்டிருக்கின்ற நிலையில் பலமானவர்கள் தமிழரசு கட்சி.

நாங்கள் அவர்களை மலினபடுத்த முடியாது அவ்வாறு செய்ய வேண்டிய நோக்கமும் இல்லை ஆனால் ஏனைய தமிழ் கட்சிகள் ஒற்றுமைக்கு வரும்போது தமிழரசு மறுப்பது ஏன்?

இதற்கு இரண்டு வழிகள் தான் இருக்கிறது ஒன்று தமிழரசு கட்சி கொள்கை ரீதியில் சக தமிழ் கட்சிகளின் கூட்டில் இணைய மறுத்தால் அவர்களை விட்டு ஏனையவர்களுடன் ஒன்றிணைந்து பயணிப்பது.

அல்லது தமிழ் மக்களிடம் தமிழரசு கட்சி தொடர்பில் எமது நிலைப்பாட்டை கூறி மக்களாக அவர்களை இணைவதற்கான அழுத்தங்களை மேற்கொள்வது.

இதையே நான் கூறுகிறேன் என்றால் எனது அரசியல் அறிவுக்கு எட்டிய வகையில் பாராளுமன்றத்தில் ஒற்றை ஆட்சி அரசியலமைப்பு நிறைவேற்றப்படப் போகிறது.

சிலர் கூறலாம் அது நிறைவேற்றப்படும் போது பார்க்கலாம் என இந்த ஆபத்து அவர்களுக்கு புரியாமல் இருக்கக்கூடும்.

தமிழ் கட்சிகளின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கினால் போதும் ஒற்றை ஆட்சி அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டதாக சர்வதேச சமூகம் முன் இலங்கை அரசு பிரச்சாரத்தை மேற்கொள்ளும்.

இதனை நான் ஒருவராக பாராளுமன்றத்தில் செய்து விட முடியாது. ஆக குறைந்தது பத்துக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை எதிர்க்க வேண்டும் இல்லையேல் ஒற்றை ஆட்சி அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் ஆபத்து உள்ளது.

ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ் மக்களுடைய பிரச்சனையை ஓரணியில் நின்றோ அல்லது எதிரணியில் நின்றோ பேசி பயன்கிட்ட போவதில்லை.

ஆகவே தமிழரசு கட்சிக்கு மீண்டும் அழைப்பு விடுகிறேன் உள்ளூர் ஆட்சி மன்ற கதிரைகள் நிரப்பப்பட்டுள்ளது இனியாவது தமிழ் மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு வந்தாறுமூலையில் குரங்கு கடித்ததில் 6 பெண்கள் படுகாயம்

## குரங்குகளின் அட்டகாசத்தால் அச்சத்தில் மூழ்கியுள்ள மக்கள்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு வந்தாறுமூலை பிரதேச குடிமனைபகுதிக்குள் உள்நுழைந்த குரங்குகூட்டம் பெண்கள் மீது கடித்ததில் இதுவரை 6 பேர் படுகாய மடைந்துள்ளதுடன் குரங்குகளின் அட்டகாசத்தினால் அப்பகுதியிலுள்ள வீடுகளின் கூரை ஒடுகள் மற்றும் பயிர்களை அழித்து சேதமாக்கி வருவதுடன் மக்கள் வீட்டை விட்டு வெளியே செல்லமுடியாது பயபீ-தியில் அச்சத்துடன் இருப்பதாக மக்கள் கடும் விசம் தெரிவிக்கின்றனர்.

வந்தாறுமூலை பேக்வீதியில் சிலநாட்களுக்கு முன்னர் வீட்டைவிட்டு வெளியில் வந்த வயதான பெண் ஒருவர் மீது குரங்குகடித்ததையடுத்து அவர் படுகாயமடைந்துள்ளார் இவரின் காலில் பாரிய தசைபகுதி இல்லாமல் போயுள்ள நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறு கடந்த ஒரு வாரத்தில் இதுவரை 6 பேர் குரங்குகடிக்கு உள்ளாகி படுகாயமடைந்துள்ளனர் இவர்கள் அனைவரும் பெண்களாக இருந்தபோதும் கடந்த சில வாரங்களாக குடிமனை பகுதிக்குள் உள்நுழைந்த குரங்கு கூட்டம் வீட்டின் கூரைகளை உடைத்து சேதமாகிவருவதுடன் மாமாரம் பலாமரம் போன்ற பயன்தரும் மரங்களின் பழங்கள் காய்களை பிடுங்கி அழித்து வருகின்றது.

அவ்வாறே அந்த பகுதியில் பயிரட்பட்ட மரக்கறிகளை பிடுங்கி அழித்து அட்டகாசம் செய்துவருவதுடன் வீட்டில் இருந்து வெளியே வரும் வயதான பெண்களை குறிவைத்து அவர்கள் மீது தாக்கி அவர்களை கடித்ததில் அவர்கள் படுகாயமடைந்துள்ளதையடுத்து மக்கள் பயபீதியில் வீட்டை விட்டு வெளியேற முடியாமல் வீட்டுக்குள் முடங்கியதுடன் அச்சத்தில் உள்ளதாக கடும் விசனம் தெரிவித்தனர்.

# மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பெண்ணின் கழுத்திலிருந்த தங்க சங்கிலியை அறுத்தெடுத்து தப்பி ஓட்டம். பெண் வைத்தியசாலையில் அனுமதி – மட்டு நகரில் சம்பவம்



மட்டக்களப்பு நகரில் உள்ள நல்லையா வீதியில் வீட்டின் முன் வய-தான பெண் ஒருவர் தும்புத் தடியால் கூட்டிக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவரின் கழுத்திலிருந்த தங்க சங்கிலியை அறுத்தெடுத்து கொண்டு அவரை வீத-யில் தள்ளி வீழ்த்திவிட்டு தப்பி ஓடிய சம்பவம் 24ம் திகதி வியாழக்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளது டன் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் சந்தியில் உள்ள வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் குறித்த வீதியில் உள்ள வீட்டில் வசித்து வரும் 78 வயதுடைய வயோதிப பெண் சம்பவதினமான அன்று காலை 6.30 மணியளவில் வீட்டின் முன் உள்ள வீதி பகுதியை தும்புத் தடியால் கூட்டி சுத்தம் செய்து கொண்டிருந்தபோது அங்கு மோட்டார் சைக்கிளில் ஒன்றில் சென்ற இரு இளைஞர்கள் அவரின் கழுத்தில் இருந்த மூன்று இலச்சம் ரூபா பெறுமதியான தங்க சங்கிலியை அறுத்து எடுத்து கொண்டு அவரை வீதியில் தள்ளி வீழ்த்திவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

இதனையடுத்து படுகாயமடைந்த அவரை உடனடியாக மட்டு போதனா வைத்தியசாலை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.



# மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் தீர்த்த திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள்

மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலைய வருடாந்த ஆடி அமாவாசை தீர்த திருவிழா 24ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்றது இதில் வரலாறு காணாதளவு பல்லாயிக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.




# Thana Insurance Inc

**T20 INSURANCE**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

**PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

**NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

**20 YEARS TERM - NON MEDICAL INSURANCE**

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100%
ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

G. f[pe;jd;

# சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஆளுநர் வலியுறுத்து!




சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் உள்ளூராட்சிமன்றங்களை முன்னெடுக்குமாறும் அதை ஒருபோதும் யாருக்காகவும் நிறுத்தவேண்டாம் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்களுடனான மாதாந்தக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் 22ம் திகதியன்று செவ்வாய்க்கிழமை (22.07.2025) நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், சில உள்ளூராட்சிமன்றங்களின் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். மக்களுக்கான அமைப்பே உள்ளூராட்சிமன்றம் என்பதை நினைவிலிருத்திச் செயற்படவேண்டும் என வலியுறுத்திய ஆளுநர், சோலைவரி மாற்றம், கட்டட அனுமதி உள்ளிட்ட விடயங்களை எவ்வளவு விரைவாக செய்து கொடுக்க முடியுமோ அதைச் செய்து கொடுக்குமாறு வலியுறுத்தினார்.

இதன் பின்னர் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதனால், வீதிப்பாதுகாப்பும் கழிவு முகாமைத்துவமும் தொடர்பான விளக்கமளிப்பு இடம்பெற்றது. உள்ளூராட்சி மன்றங்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் அவர் சுட்டிக்காட்டினார்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான விடயத்தில் குப்பைகளை தரம் பிரித்து பொதுமக்கள் வழங்குவதில் பின்னடிக்கும்போக்கு அவதானிக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சிமன்றங்களின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் குறிப்பிட்டனர். கண்டி மாவட்டத்தில் உணவு பொதி செய்வதற்கு அல்லது உணவை உண்பதற்கு பயன்படுத்தப்படும் “லஞ்ச் சீற்றை” துப்புரவு செய்து கொடுத்தாலேயே உள்ளூராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ளும் நிலைமை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் இங்கு இவ்வாறான இறுக்கமான நடைமுறைகளை சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தீர்மானங்களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.



வீதிகளில் குப்பைகளைப் போடுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களால், எந்தெந்த வீதிகளில் எந்த நேரத்தில் சுற்றுச்சூழல் பொலிஸாரின் சுற்றுக்காவல் நடவடிக்கை தேவை என்ற விவரங்களை வழங்குமாறும் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதாக சுற்றுச்சூழல் பொலிஸார் குறிப்பிட்டனர். மேலும், யாழ். மாநகர சபையில், குடியிருப்பார்களுக்கு அட்டை வழங்கி முன்னெடுக்கப்பட்டு வரும் கழிவகற்றல் பொறிமுறையை ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் முன்னெடுக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

மேலும், மின்கம்பங்களில் ஏறி மின்விளக்குகள் பொருத்துதல் மற்றும் திருத்துதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்பட்ட 38 பணியாளர்களின் பெயர்ப்பட்டியல் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தெரிவித்தார்.

தொடர்ந்து ஏனையோருக்கு அடுத்த கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார். மேலும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இங்கு தெரிவித்தார். இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர் அனைத்துச் சபைகளினதும் தவிசாளர்கள், மேயர் உள்ளிட்டோரைச் சந்திக்கவுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி. தனுஜா முருகேசன், ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாநகர சபை ஆணையாளர்கள், 5 மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், நகர சபைச் செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், சுற்றுச்சூழல் பொலிஸார் ஆகியோர் பங்கேற்றனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் "விடுதலை நீர்" சேகரிக்கும் பணி ஆரம்பம்



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையில் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடப்படவுள்ள விடுதலை விருச்சத்திற்கான நீர் சேகரிக்கும் வாகன பவனி யாழ்ப்பாணம் திருநெல்வேலி இருந்து ஆரம்பித்திருக்கிறது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை வலியுறுத்தும் வகையிலான அணி திரள் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் 25ஆம் திகதிகளில் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ளது.





அந்த நிகழ்வின் முக்கிய அங்கமாக விடுதலை விருட்சம் நடப்பட உள்ளது. குறித்த விடுதலை வெளிச்சத்திற்கான நீர் சேகரிப்பு தாயக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தன்னார்வலர்கள் மற்றும் பொது அமைப்புகள் உங்கள் பிரதேசங்களில் விடுதலை விருட்சத்திற்கான நீரினை சேகரித்து கிட்டு பூங்காவில் இடம் பெறும் விடுதலை நிகழ்வில் கையளிக்க முடியும்.

மேலும் தங்கள் பிரதேசத்துக்கு வரும் நீர் சேகரிக்கும் வாகனத்திலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை முன்னிறுத்தி ஒரு குவளை நீரை நீங்களும் வழங்க முடியும் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்திருக்கின்றனர்.

# நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நடைபெற்ற "பந்தல் கால் நாட்டும் காளாஞ்சி வழங்கலும்"!

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லையம்பதி அலங்கார கந்தன் மஹாற்சவம் எதிர்வரும் 29.07.2025 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் மஹோற்சவத்தினை முன்னிட்டு நல்லையம்பதி அலங்காரகந்தன் தேவஸ்தான வளாக சுற்றாடல் பகுதியில் பந்தல் நாட்டலும், செங்குத்தா பரம்பரை சார்ந்தவர்களுக்கான களாஞ்சி வழங்கும் வைபவம் 21ம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெற்றது.

கருவறையில் வீற்று இருக்கும் அலங்காரவேலனுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றது. காலை 08.30 மணி சுப நேரத்தில் தேவஸ்தான பிரதம குரு வைகுந்தகுருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நல்லையம்பதி அலங்காரகந்தன் தேவஸ்தான வளாக சுற்றாடல் பகுதியில் பந்தல் நாட்டி வைத்தனர். தொடர்ந்து மாட்டு வண்டி மூலமாக சென்று செங்குத்தா பரம்பரை சார்ந்தவர்களுக்கான களாஞ்சியும், மஹோற்சவ நிகழ்ச்சி நிரலையும் வழங்கிவைத்தனர். இதில் பக்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.







25 நாட்கள் இடம்பெறும் மஹோற்சவமானது எதிர்வரும் 29.07.2025 அன்று கொடியேற்றதுடன் ஆரம்பமாகி 22.08.2025 அன்று கொடியிறக்கத்துடன் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்த இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்த இளைஞர் ஒருவர் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று 3 உயிரிழந்தார். யாழ்ப்பாணம் - சிவலிங்கப் புளியடியைச் சேர்ந்த செ.பிரசாந்தன் (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இவர் கடந்த 5 வருடங்களாக ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்துள்ளார். இந்நிலையில் 19ம் திகதி மயக்கமடைந்த நிலையில் வீட்டில் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நண்பர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். யாழ்ப்பாணம் பொலிஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுனியா மாட்டுத்தொழுவத்தில் அனுமதியின்றி அதிகளவில் வெட்டப்படும் மாடுகள்

### மாநகரசபை நியமித்த குழுவினரின் திடீர் விஜயத்தில் அம்பலம்



வவுனியா மாட்டுத் தொழுவத்திற்கு மாநகர சபை நியமித்த குழுவினர் முன்னெடுத்திருந்த திடீர் விஜயத்தின் போது அனுமதியின்றி மாடுகள் வெட்டப்படுவது அவதானிக்கப்பட்டிருந்தமையுடன் தொடர்ச்சியாக மாட்டுத்தொழுவம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வருகின்றமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மாடுகள் எண்ணிக்கை சடுதியாக குறைவடைந்து காணப்படுவதுடன் பால் உற்பத்தியும் அற்று காணப்படுகின்றது.

மேலும் மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு மாட்டிறைச்சி



ஏற்றுமதி செய்யப்படுவதால் மாவட்டத்தில் மாட்டிறைச்சியின் விலையும் அதிகரித்து காணப்படுகிறது.

அத்துடன் சுகாதாரமான முறையில் மாடு வெட்ட படுகின்றனவா என்பதை உறுதிப் படுத்தும் முகமாக மாநகர முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபன் அவர்களினால் ஐவர் அடங்கிய விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விசேட குழு 21ம் திகதி திங்கட்கிழமையன்று திடீர் விஜயம் ஒன்றினை முன்னெடுத்து மாட்டுத் தொழுவத்திற்கு சென்றிருந்தனர்.

இதன் போது சுகாதார பரிசோதகரின் அனுமதியினை மீறி அதிகளவில் மாடு வெட்டப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையுடன் சுகாதார சீர்கேட்டுடன் குறித்த பகுதி காணப்பட்டமையும் உறுதிசெய்யப்பட்டது.

குறித்த விஜயம் குறித்த அறிக்கை மாநகர முதல்வர் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையின் படி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக மாநகர சபையினர் தெரிவித்துள்ளனர்.

இவ் விசேட குழுவில் துணை முதல்வர் பரமேஸ்வரன் கார்த்தீபன் தலைமையில் மாநகர சபை உறுப்பினர்களான நடராஜா தர்மத்திரனம், அப்துல் பாரி, முகமட் லரீப் மற்றும் சுகாதார பரிசோதகர் ஆகியோரே உள்ளடங்குகின்றனர்.

இதற்கு முன்னர் மாநகர துணை முதல்வர் மாட்டுத் தொழுவத்திற்கு சென்றிருந்த சமயத்தில் அங்கு சுகாதார சீர்கேடு நிலவுவதாக மாநகர முதல்வருக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த சாதாரண பரீட்சையில் சாதனை படைத்த சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மாணவர்கள்மாணவர்கள் கௌரவிக்கப்பெற்றனர்!





க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்திகளை பெற்றுக்கொண்ட மாணவர்கள் மற்றும் ஏ பி சித்திகளை பெற்றுக்கொண்ட, சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் மாணவர்கள் 22ம் திகதி அன்றையதினம் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் 22ம் திகதி அன்றையதினம் இவ்வாறு கல்லூரியில்



வைத்து கௌரவிக்கப்பட்டனர். இதன்போது மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரியின் முதல்வர் திருமதி. சுலபாமதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி. அ.வேலுப்பிள்ளை முன்னாள் ஆசிரியர் பூசலட்சுமி பொன்னுத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் அதிபர்கள்/ஆசிரியர்கள் பெற்றோர் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த கௌரவிப்புக்கான நிதி அனுசரணையை முன்னாள் கணித பாட ஆசிரியர் சபாபதிப்பிள்ளை பாலகிருஷ்ணன் குழுவினர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் சி.ஐ.டியினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஊடகவியலாளர்



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான தங்கராஜா காண்டீபன் 22.07.2025 செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட தலைவரும், காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவருமான இரத்தினசிங்கம் முரளிதரன் பரந்தனில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மைதானமொன்றில் உதைபந்தாட்ட கம்பம் விழுந்து இளைஞர் உயிரிழப்பு!



நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகழக மைதானத்தில் உதைப்பந்தாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் கோல் கம்பம் வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுவராஜ் செபஸ்தியாம்பிள்ளை (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இச்சம்பவம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞர் மீது கோல் கம்பம் வீழ்ந்ததால் அவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# யாழ்ப்பாணம். காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை 20ம் திகதி இரவு பரவிய தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது



கடந்த 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமைத இரவு 9 மணி அளவில் காரைநகர் கசூரினா கடற்கரை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள சவுக்கு மரங்கள், பனை மரங்கள் புற்கள் ஆகியவற்றில் தீ பரவியுள்ளது.

இதனை அறிந்த பிரதேச மக்கள் பொலிசாருக்கும் கடற்படையினருக்கும் தகவல் வழங்கியதை அடுத்து அங்கு சென்ற பொலிசாரும் கடற்படையினரும் பிரதேச சபையினரும் பவுசர்கள் மூலம் தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அதிகாலை 2 மணி அளவில் தீ கட்டுப்பாட்டுக்குள்



கொண்டுவரப்பட்டது. இதன் போது பெருமளவான மரங்கள் தீயினால் எரிந்து நாசமாகியது. தீப்பரவலுக்கான காரணம் அறியப்படவில்லை. ஊர்காவற்றுறை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஐநாவுக்கு மீண்டும் ஒரு கடிதம்?



— யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் —

கடந்த இருபதாம் தேதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் டில்கோ விருந்தினர் விடுதியில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. சந்திப்புக்கான அழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் எடுத்திருந்தார். குறிப்பாக கருத்துருவாக்கிகளை அழைக்கும் பொழுது அவர் அனைத்துலகை விசாரணைப் பொறிமுறை தொடர்பாகக் கதைக்கப் போகின்றோம் வாருங்கள் என்று அழைத்திருந்தார். அதோடு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதி ஐநாவுக்கு அனுப்பப்பட்ட கூட்டுக்கடிதத்தின் தொடர்ச்சியாகவும் கதைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

எண்பதுக்கும் குறையாதவர்கள் வந்திருந்தார்கள்.தமிழ்தத் தேசியப் பேரவையைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள், குடிமக்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காப் போராடும் அமைப்புகளை சேர்ந்தவர்கள், அணையா விளக்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தவர்கள், மத குருக்கள்... என்றிவ்வாறாக சுமார் 80க்கும் குறையாதவர்கள் அங்கே வந்திருந்தார்கள். முதலில் கஜேந்திரக்குமார் பேசினார். தொடர்ந்து அங்கு வந்திருந்தவர்கள் பேசினார்கள்.

ஒரு கட்டத்தில் கஜேந்திரகுமார் அந்தக் கூட்டத்தின் நோக்கம் ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்புவது என்று சொன்னார். வரும் செப்டம்பர் மாதம் வர இருக்கும் கூட்டத்தொடரை முன்னிட்டு ஒரு கடிதத்தை அனுப்ப வேண்டும். அந்தக் கடிதம் நான்கு ஆண்டுகளுக்கு முன் அனுப்பப்பட்ட கடிதத்தின் தொடர்ச்சியாகவும், அந்தக்கடிதத்தில் ஏற்கனவே கூறப்பட்டவற்றை வலியுறுத்தியும் எழுதப்பட வேண்டும் என்று கஜேந்திரகுமார் கூறினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி குருபரனும் அதே கருத்தைக்கூறி அந்த நோக்கத்துக்காகத்தான் அந்த சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது என்று கூறினார். ஆனால் அழைக்கப்பட்ட ஒரு பகுதியினருக்கு அது பொதுவாக சர்வதேசப் பொறிமுறையைக் குறித்து ஆராய்வதற்கு என்றுதான் கூறப்பட்டது. ஜெனிவாவுக்கு கடிதம் எழுதுவதற்காக என்று தெளிவாகக் கூறப்படவில்லை.

அதனால் அந்தச் சந்திப்பில் சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான பரந்துபட்ட வேலைத் திட்டம் தொடர்பாக ஆரம்பத்தில் உரையாடிய இக்கட்டுரை ஆசிரியர் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் சுரே' பிரேமச்சந்திரன், சிறீகாந்தா போன்றவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கும் அப்பால் பெருமளவுக்கு ஐநா மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதப் போகும் கடிதத்தை நோக்கியே குவிமயப்படுத்தப்பட்டது.

இந்த இடத்தில் அதற்கு முன் அதாவது நான்கு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட கடிதத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறவேண்டும். அந்தக் கடிதத்தைத் தயாரிக்கும் வேலையை முதலில் தொடங்கியது மன்னரைச் சேர்ந்த சிவகரன். அதன்பின் அவர் இக்கட்டுரை ஆசிரியரும் உட்பட வேறு சிலரையும் அதற்குள் ஈர்த்துக் கொண்டார். முதலாவது சந்திப்பு கிளிநொச்சியில் இடம்பெற்றது. இரண்டாவது சந்திப்பு வவுனியாவில். மூன்றாவது சந்திப்பு கிளிநொச்சியில். இந்த மூன்றாவது சந்திப்பின் விளைவாக ஒரு கூட்டுக்கடிதம் தயாரிக்கப்பட்டது. அந்தக்கூட்டுக் கடிதத்தில் பிரதான அம்சங்கள் இரண்டு. ஒன்று, பொறுப்புக் கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பது. அதாவது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கான அந்தப் பொறிமுறையை ஐநா மனித உரிமைகள் பேரவை என்ற மட்டுப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்புக்குள் வைத்துக் கொண்டிருப்பதனால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நன்மைகளைப் பெறமுடியவில்லை. எனவே மனித உரிமைகள் பேரவையிடமிருந்து பொறுப்புக்கூறலை ஐநா பொதுச்செயலர் தன்னிடம் எடுத்துக்கொண்டு, அதனை பன்னாட்டு நீதிமன்றங்களுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்பது முதலாவது கோரிக்கை.

இரண்டாவது கோரிக்கை, போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்குமிடத்து அதற்கு கால வரையறை இருக்க வேண்டும் என்பது. அதன்படி கஜேந்திரக்குமார் 6 மாத காலம் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். ஆனால் ஏனைய கட்சிகள் குறைந்தது ஒரு வருடமாவது வழங்கவேண்டும் என்று கேட்டன. முடிவில் இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து கூட்டுக் கடிதம் எழுதப்பட்டது.

12 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து அவ்வாறு உலக நிறுவனம் ஒன்றுக்கு ஒற்றுமையாக ஒரு கூட்டுக் கடிதம் எழுதியமை என்பது அதுதான் முதல் தடவை.

ஆனால் அந்த கடிதத்திற்கு ஐநா பெருமளவுக்கு சாதகமாக பதில் வினையாற்றவில்லை. பொறுப்புக்கூறலை அவர்கள் தொடர்ந்தும் மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கியதோடு, சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பும் மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்கு உட்பட்டதாக, அணையாளருடைய அலுவலகத்துக்குள் இயங்கும் ஓர் அலுவலகமாக உருவாக்கப்பட்டது. அதற்குரிய காலை எல்லையும் நிர்ணயிக்கப்படவில்லை. இன்று வரை அது செயல்படுகிறது.

அதாவது அந்த கடிதத்தில் கேட்டுக்கொண்ட முக்கியமான விடயங்களை ஐநா நிறைவேற்றவில்லை. இந்நிலையில் இந்த செப்டம்பர் மாதம் வரவிருக்கும் ஐநா கூட்டத் தொடருக்கு முன்னதாக தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்ப வேண்டும் என்பதே டில்கோ சந்திப்பின் நோக்கம் என்று கூறப்பட்டது.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து போயிருக்கும் ஒரு பின்னணியில், அவர் கொழும்பில் வைத்துத் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு உடன்படாதவைகளாகக் காணப்படும் ஒரு பின்னணியில், கொழும்பில் உள்ள ஐநா அலுவலகம் உள்நாட்டுப் பொறிமுறையை பாதுகாக்கும் விதத்தில் கருத்துக்களை தெரிவித்திருக்கும் ஒரு பின்னணியில், இலங்கை அரசாங்கமானது சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் ஒன்றை உருவாக்க இருப்பதாக கஜேந்திரகுமார் அந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

அந்தக் கட்டமைப்பானது நாட்டின் உள்நாட்டுப் பொறிமுறையின் நம்பகத்தன்மையைப் பலப்படுத்தும் நோக்கத்தை கொண்டது. இலங்கை அரசாங்கத்தின் சட்டமா அதிபர் திணைக்களமானது சட்ட விவகாரங்களைக் கையாளும் பொழுது அரசாங்கத்துக்கு ஆதரவான மற்றும் எதிரான வழக்குகளை அதுவே கையாண்டு வருகிறது. அது அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருப்பதனால் அதன் சுயாதீனப் பண்பு குறித்து கேள்விகள் உண்டு. எனவே உத்தேச சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகமானது சுயாதீனமானது என்ற ஒரு தோற்றத்தைக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கம் முயற்சிக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், அதுபோன்ற உள்நாட்டு பொறிமுறைகளை பலப்படுத்தும் கட்டமைப்புகளை ஏற்றுக்கொள்ளாமல் அனைத்துலக விசாரணையை வலியுறுத்த வேண்டும் என்றும் கஜேந்திரக்குமார் கேட்டுக்கொண்டார்.

சந்திப்புக்குத் தமிழரசுக் கட்சி அழைக்கப்பட்டிருந்த போதிலும் அது வந்திருக்கவில்லை. தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் என்ன நிலைப்பாட்டோடு இருக்கிறது என்பதனை உத்தியோகபூர்வமாக அறிய முடியவில்லை. எனினும் அண்மையில் அதன் பதில் தலைவர் சிவஞானம், ஐநாவுக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில் அங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

ஐநாவுக்கு கடிதம் எழுதவேண்டும். அதில் சந்தேகம் இல்லை.தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளை பேசுவதற்கு திறக்கப்பட்டிருக்கும் ஒரே அனைத்துலக அரங்கம் அதுதான். அது பலவீனமானது. 16 ஆண்டுகளின் பின்னர் முள்ளிவாய்க்காலில் நடந்ததுதான் காசாவில் நடக்கின்றது. அதனைத் தடுக்க முடியாத ஐநா தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு நீதியைப் பெற்றுத்தரும் என்ற கேள்விக்கு இங்கு விடை முக்கியம்.

எனினும், தமிழ் மக்கள் ஐநாவுடன்தான் "என்கேஜ்" பண்ண வேண்டும். அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் இங்கு பிரச்சனை என்னவென்றால், ஐநா பொறுப்புக் கூறலை அனைத்துலகை நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும் என்று ஒரு கடிதத்தை கூட்டாக எழுதுவதால் மட்டும் அது நடக்கப் போவதில்லை என்பதைத்தான் கடந்த நான்கு ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

இந்நிலையில் ஐநாவை நோக்கி அதாவது ஐநாவில் முடிவெடுக்கும் நாடுகளை நோக்கி "லொபி" செய்ய வேண்டும். அதாவது நீதிக்கான தமது போராட்டத்தில் தமிழ் மக்கள் அனைத்துலக அரங்கில் நமது ஆதரவு சக்திகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும். அவ்வாறு அனைத்துலகத்தை தம்மை நோக்கித் திரட்டிக் கொள்வது என்றால், அதற்கு முதல் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். இது டில்கோ சந்திப்பில் இக்கட்டுரை ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அத்தகைய பரந்துபட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் அச்சந்திப்பில் பெரிய அளவுக்கு விவாதிக்கப்படவில்லை. அவை ஒரு சந்திப்பில் மட்டும் கூடி முடிவெடுக்கக்கூடிய விடையங்கள் அல்ல.

ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக முன்னைய கடிதத்தின் தொடர்ச்சியாக தமிழ்த் தரப்பு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு உழைத்திராத ஒரு பின்னணிக்குள், ஐநா தன்னுடைய நோக்கு நிலையில் இருந்து விடயங்களை நகர்த்திக் கொண்டு வரும் ஒரு பின்னணியில், மீண்டும் ஒரு கடிதம் எழுதுவது என்பதனை எப்படிப் பார்ப்பது?

அதிலும் குறிப்பாக அக்கடிதத்தில் பிரதான கட்சியாக தமிழரசு கட்சி கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் அந்த கடிதத்துக்கு ஒப்பீட்டளவில் பெரிய அங்கீகாரம் இருக்காது. ஆனால் தமிழரசுக் கட்சியின் கையெழுத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் எவையும் அங்கே இல்லை என்பதும் உணரப்பட்டது. அந்த அடிப்படையில் பார்த்தால், அந்தச் சந்திப்பு தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்தும் ஒரு விளைவைத்தான் தரும்.

ஆயின், தமிழ்த் தரப்பு இரண்டாக நிற்கிறது என்று பொருள். இவ்வாறு தமிழ்த் தரப்பு இரண்டாக நிற்பது என்பது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள விரும்புகின்ற வெளிச் சக்திகளுக்கு வாய்ப்பானது.

ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து அனுப்பிய கடிதத்திற்கே ஐநாவின் பதில்வினை சாதகமாக இல்லாத ஒரு பின்னணிக்குள், மீண்டும் ஒரு கடிதம் அதிலும் உள்ளதில் பெரிய கட்சி கையெழுத்திடாத ஒரு கடிதம் என்பது ஒரு பலவீனமான நிலைதான்.

அதிலும் குறிப்பாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு நிகராக அரசாங்கத்துக்கும் ஏழு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. எனவே தமிழ் மக்களின் விவகாரங்களைக் கையாள்வதற்கு எனக்கும் ஆணை உண்டு என்று அரசாங்கம் கூறக்கூடிய நிலைமைகள் அதிகமுடைய ஒரு உள்நாட்டுச் சூழலில், தமிழ்த் தரப்பில் பிரதான பெரிய கட்சியை இணைத்துக் கொள்ளாமல் ஒரு கடிதத்தை எழுதினால், அது அனைத்துலக அரங்கில் எப்படிப் பார்க்கப்படும்?

அதிலும் குறிப்பாக முதலாவது கடிதத்தின் பின் கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த கடிதத்தில் எழுதப்பட்டவற்றை நோக்கி அனைத்துலக சமூகத்தை உந்தித்தள்ளும் விதத்தில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய நிர்ணயகரமான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காத ஒரு பின்னணிக்குள்தான், மீண்டும் ஒரு கடிதத்தை தமிழ் தரப்பு எழுதப் போகிறது. அதாவது அனைத்துலக சமூகம் தமிழ் மக்களின் கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிக்காத ஒரு பின்னணிக்குள் தொடர்ந்தும் கடிதம் எழுதுவது என்பது தமிழ் தரப்பின் இயலாமையைப் பிரதிபலிக்கும் ஒரு செயலாகவும் பார்க்கப்படலாம்.

**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

கனடிய செய்திகள்
Canadian News

# "செம்மணி புதைகுழி விவகாரத்தை நாம் எவ்வளவு வீச்சாக உலகின் பார்வைக்கும் காதுகளுக்கும் கூட்டாக எடுத்துச் செல்கின்றோமோ அந்தளவிற்கு இலங்கை அரசின் இனப்படுகொலையாளர்களின் முகத்திரைகளை கிழித்தெறியலாம்"

## எதிர்வரும் சனிக்கிழமை 26ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சிக் கூட்டம் தொடர்பான விளக்கமளிப்பு சந்திப்பில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி தெரிவிப்பு

"தற்போது எம் தமிழ் மக்கள் மத்தியில் எரியும் பிரச்சனையாகவும் நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டிய ஒரு எமது கடமையாகவும் உள்ள செம்மணி புதைகுழி விவகாரத்தை நாம் எவ்வளவு வீச்சாக உலகின் பார்வைக்கும் காதுகளுக்கும் கூட்டாக எடுத்துச் செல்கின்றோமோ அந்தளவிற்கு இலங்கை அரசின் இனப்படுகொலையாளர்களின் முகத்திரைகளை கிழித்தெறியலாம். இந்த வகையில் கனடாவின் ஸ்காபுறோ நகரில் அமைந்து திறந்த வெளி அரங்கில் எதிர்வரும் 26ம் திகதி சனிக்கிழமை நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள விழித்தெழு தமிழா என்னும் எழுச்சிக் கூட்டத்தை நாம் ஒரு முக்கிய தளமாகப் பயன்படுத்த வேண்டும். அந்த திறந்த வெளி அரங்கில் கனடா வாழ் தமிழ் மக்கள் மாத்திரமல்ல எம்மோடு தொடர்புடைய வேற்றின மக்களையும் அழைத்து வந்து அவர்களின் காதுகளிலும் எம்மீது இலங்கை அரசு கடந்த காலங்களில் மேற்கொண்ட அனைத்து அடக்கு முறைகளையும் படுகொலைகளையும் அதனால் எமது தோண்டப்பட்டுக்கொண்டிருக்கும் மனிதப் புதைகுழிகளையும் அங்கு கோரமாகக் காட்சியளிக்கும் எலும்புக்கூடுகளையும் இதனால் நாம் அனுபவிக்கும் துன்பியல் விடயங்களையும் உலகின் காதுகளுக்கு எடுத்துச் செல்லவேண்டும்".




இவ்வாறு கனடாவில் இயங்கிவரும் BEHIND ME FOUNDATION என்னும் மனித நேய அமைப்பானது எதிர்வரும் சனிக்கிழமை 26ம் திகதி ஸ்காபுறோ ALBERT CAMPBELL SQUARE திறந்த வெளி அரங்கில் ஏற்பாடு செய்துள்ள "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சிக் கூட்டம் தொடர்பான விளக்கமளிப்பு சந்திப்பில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.







மேற்படி ஊடகவியலாளர்கள் சந்திப்பிற்கு BEHIND ME FOUNDATION என்னும் மனித நேய அமைப்பின் நிறுவனரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கனேந்திரன் செல்வராஜா அவர்கள் தலைமை தாங்கினார். அங்கு ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் TORONTO VOICE OF HUMANITY என்னும் மனித நேய அமைப்பின் தலைவருமான நாகமணி லோகேந்திரலிங்கம் மற்றும் "யுகம் வானொலி" நிலையத்தின் அதிபரும் கலைஞருமான கணபதி ரவீந்திரன் ஆகியோர் பிரதான மேசையில் அமர்ந்திருந்து ஏனைய ஊடகவியலாளர்களின்






கேள்விகளுக்கு பதிலளித்தனர்.

அங்கு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் உறுப்பினரான லோகன் கணபதி தொடர்ந்து உரையாற்றுகையில் "எமது தாயக மண்ணில் தமிழர்களாகப் பிறந்த ஒரு காரணத்திற்காகவும் நாங்கள் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டு வாழ்கின்கின்றோம் என்பதை உலகிற்கு எடுத்துச் சொல்கின்ற காரணத்தாலும் எமது மக்கள் அந்த மண்ணில் தொடர்ச்சியாக இனவாதத் தாக்குதலுக்கும் பொலிஸ், இராணுவம் மற்றும் புலனாய்வுத் திணைக்களத்தின் சிப்பாய்கள் ஆகியோரின் அடக்கு முறைகளுக்கும் காரணமற்று கைது செய்யப்படுவதுமான கொடுமைகள் இன்னும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. எனவே இலங்கை அரசினதும் அரச பயங்கரவாத்தினதும் அநியாயங்களை இலங்கைக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு உண்டு" என்றார்.

அங்கு தலைமை உரையாற்றிய BEHIND ME FOUNDATION என்னும் மனித நேய அமைப்பின் நிறுவனரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கனேந்திரன் செல்வராஜா அவர்கள் தமது அமைப்பும் அத்துடன் இணைந்து இயங்கிவரும் BEHIND ME INTERNATIONAL MEDIA ஊடக நிறுவனமும் இணைந்து எதிர்வரும் 26ம் திகதி சனிக்கிழமை விழித்தெழு தமிழா என்னும் எழுச்சிக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தமிழ் மக்கள் எங்கு இருந்தாலும் எந்த அமைப்புக்களில் அங்கம் வகித்தாலும். எமது மொழிசார்ந்தும் எமது பண்பாடு சார்ந்தும் இந்த எழுச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உலக மக்களுக்கும் எம்மீது அடக்குமுறைகளை தொடர்ச்சியாகத் திணிக்கும் இலங்கையின் இனவாத அரசாங்கங்களின் செயற்பாடுகளை எடுத்துச் செல்லும் கருவிகளான நாம் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் TORONTO VOICE OF HUMANITY என்னும் மனித நேய அமைப்பின் தலைவருமான நாகமணி லோகேந்திரலிங்கம் தனது கருத்துப் பகிர்வின் போது தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் கனடிய தேசத்தில் பல அமைப்புக்கள் எமது மக்களின் பிரச்சனைகளை எடுத்துச் சொல்வதற்காகவும் இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக போராட்டங்களை நடத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் கனடாவில் இயங்கிவரும் BEHIND ME FOUNDATION என்னும் மனித நேய அமைப்பானது ஏற்பாடு செய்துள்ள விழித்தெழு தமிழா என்னும் எழுச்சிக் கூட்டத்தில் தமது அமைப்பும் இணைந்திருப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 2009ம் ஆண்டு எமது போராட்டத்தில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதற்கு பின்னர் கனடாவில் எந்த ஒரு அமைப்பும் மக்களுக்காக இயங்கத் தேவையில்லை என்ற ஒரு கருத்து எமது மக்கள் மத்தியில் பரப்பப்பட்ட போது தனது உதயன் பத்திரிகையில் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் "அப்படி எண்ணுவது தவறு. கனடாவில் தொடர்ச்சியாக மாவீரர் நினைவு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் மக்களை வழி நடத்துவதற்கும் "உலகத் தமிழர் இயக்கம்" போன்ற அமைப்புக்களின் தேவை இன்னும் உள்ளது" என்ற கருத்துப்பட எழுதியதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் கனடாவில் இயங்கிவரும் BEHIND ME FOUNDATION என்னும் மனித நேய அமைப்பும் BEHIND ME INTERNATIONAL MEDIA ஊடக நிறுவனமும் இணைந்து எதிர்வரும் 26ம் திகதி சனிக்கிழமை விழித்தெழு தமிழா என்னும் எழுச்சிக் கூட்டத்தை நடத்துவது காலத்தின் தேவை என்பதை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து அங்கு சமூகமளித்திருந்த ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் மேற்படி நால்வரும் பதிலளித்தனர்.

எதிர்வரும் 26ம் திகதி சனிக்கிழமை விழித்தெழு தமிழா என்னும் எழுச்சிக் கூட்டம் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள (647) 532-1190, (416) 898-7284, (647) 302-1189 ஆகிய தொலைபேசி இலக்கங்களையும் அழைக்கலாம்.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்


All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் கம்போடியாவின் அங்கோர் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும்

## சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் "கடாரவெற்றியின்" ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டமும். சிறப்பு மாநாடும்




சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் கம்போடியாவின் அங்கோர் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டமும். சிறப்பு மாநாடும் எதிர்வரும் நவம்பர் 22 மற்றும் 23, 2025 ஆகிய திகதிகளின் நடைபெறும்.

இடம் - சியிம்ரீப், அங்கோர்.

இம்மாநாட்டில் உலகமுழுவதுள்ள தமிழறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இதையொட்டி
நவம்பர் 21 - 26 வரை ஆறு நாட்கள் பன்முக விழாவாக கொண்டாடப்பட்டுள்ளது.

இந்த 6 நாட்கள் விழாவிலும் பங்கேற்று அங்கோர்வாட் களப்பயணம் மேற்கொண்டு மாநாட்டு நிகழ்விலும் கலந்துகொள்வோருக்கு அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்படுகின்றன.

நவம்பர் 21 முதல் 26 வரை 6 தினங்கள் தங்குவதற்கு. ஐந்து நட்சத்திர விடுதி, உணவு, கம்போடிய விசா, பேருந்து, அங்கோர்வாட், ஆயிரம் லிங்கங்கள், நாம் குல்லென் அருவி,படகு சுற்றுலா மற்றும் இரண்டு தினங்கள் மாநாட்டு நிகழ்வில் பங்கேற்பு.

அனைத்திற்குமான மொத்தக் கட்டணம். அமெரிக்க டாலர் $400 மட்டுமே. (Excluding Air Ticket)

இம்மாநாட்டில் பங்கேற்கும் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தின் சார்பாக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்த மாநாட்டில் பங்கெடுப்பதற்கும் பார்வையாளர்களாக கலந்து கொள்வதற்கும் இலங்கை. இந்தியா. மலேசியா, சிங்கப்பூர் மற்றும் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஆகியோரும் வரவேற்கப்பெறுகின்றனர்.

வரலாற்று நோக்கில் பல்லவர்களும், பாண்டியர்களும், சோழர்களும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரசாண்டும்,நட்புறவு பாராட்டியும் மக்களோடு கலந்து தங்களது கலை, சிற்பம், கோவில், பண்பாடு ஆகியவற்றை நிறுவி பெரும் பண்பாட்டுப் புரட்சியும், வணிகத் தொடர்பும் செய்திருந்தனர். மாநாட்டுத் தொடர்பானக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி: angkorthamizhsangamtn@gmail.com
அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: 30.09.2025

மேலும் தேவையான விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:
திருமதி. தாமரை சீனுவாசராவ் - வாட்ஸ்அப்: +91 9489902060
இரா. ஞானசேகரன் - துணைத் தலைவர் - வாட்ஸ்அப்: +855 81 41 21 79

இலங்கை செய்திகள் Sri Lanka News

# விடுதலை அரசியலில் பண்பாட்டின் வகிபாகம் இன்றியமையாதது ஆடிப்பிறப்பு விழாவில் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



விடுதலைக்காகப் போராடும் இனமொன்று மக்களை எழுச்சி கொள்ளவைத்து ஒருங்கிணைக்கத் தேசிய வாதத்தை முன்னிலைப்படுத்துகின்றது. இதில் அந்த இனத்தேசியத்தின் கூறுகளான மொழி, பாரம்பரிய நிலபுலங்கள், பண்பாடு ஆகியவை முதன்மை பெறுகின்றன. ஆனால், தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் மொழி, நிலம் பற்றிப் பேசுகின்ற அளவுக்கு பண்பாட்டைக் கருத்திற் கொள்ளுவதில்லை. பண்பாட்டை உள்வாங்காத தேசியவாதம் முழுமை பெறாது. அதுவும் விடுதலை அரச-ியலில் பண்பாட்டின் வகிபாகம் மிகவும் இன்றியமையாதது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா கடந்த வியாழக்கிழமை (17.07.2025) நாவற்குழி முத்தமிழ் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஒரு இனத்தின் தனித்துவமான பண்பாட்டின் வெளிப்பாடுகளாகவே விழாக்களும் பண்டிகைகளும் அமைகின்றன. தமிழ் மக்களின் அறிவு ரீதியான காலக்கணிப்பீட்டையும் பகிர்ந்துண்ணும் ஆரோக்கிய உணவுப் பண்பாட்டையும் பறைசாற்றுகின்ற பண்டிகைகளாகத் தைப்பொங்கலும் ஆடிப்பிறப்பும் கொண்டாடப் படுகின்றன. சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் தை முதல் ஆனி வரையான காலப்பகுதி உத்தராயண காலம் எனவும், சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் ஆடி முதல் மார்கழி வரையான காலப்பகுதி தட்சணாயண காலம் எனவும் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றில் உத்தராயண காலத் தொடக்கம் தைப்பொங்கல் ஆகவும், தட்சணாயண காலத்தொடக்கம் ஆடிப்பிறப்பாகவும் கொண்டாடப்படுகிறது.

தைப்பொங்கல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும் அளவுக்கு ஆடிப்பிறப்பு இப்போது கொண்டாடப்படுவதில்லை.



ஆடிப்பிறப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கிய காலமொன்றும் இருந்தது. ஆனால், ,ன்று விடுமுறை இல்லை. "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!" என்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாடல் மாத்திரம்தான் பாடப்படுகின்றது. தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கிலாவது கல்வியமைச்சு ஆடிப்பிறப்பு நாளுக்கு விடுமு-றயை வழங்கி அதற்கு மாற்றீடாக சனிக்கிழமை ஒன்றில் பாடசாலை-யை நடாத்துவதற்கு முன்வரவேண்டும். அப்போதுதான் எமது இளைய தலைமுறைக்கு ஆடிப்பிறப்புக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் விளங்கும்.

தமிழ்ப்பண்பாடு ஒருபுறம் சிங்களபௌத்த மேலாதிக்கத்தினாலும் இன்னொருபுறம் உலகமயமாக்கலினாலும் அதன் அடையாளத்தை இழந்துகொண்டிருக்கிறது. இவற்றோடு எமது அக்கறையின்மையினாலும் நாம் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வந்த பண்பாட்டு விழுமியங்களும் பாரம்பரிய விழாக்களும் கைவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருதேசிய இனத்தின் தரத்தை மதிப்பீடு செய்யும் அளவு கோல்களில் அது பேசும் மொழி, அதன் வாழிடம் என்பனவற்றுக்கு நிகராக அதன் தனித்துவமான பண்பாடும் உள்ளது. இதனைத் தமிழ்த்தேசிய அரசியல் தலைமைகள் கருத்தில் எடுத்துப் பண்பாட்டுச் செயற்பாடுகளை மக்களிடையே எடுத்துச்செல்வதற்கு முன்வரவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## அலெக்சாந்தர் ஆசானுக்கு கண்ணீரால் காணிக்கை
### (நிலைமண்டில ஆசிரியப்பா)

*அலெக்சாந்தர் என்ற அறிவுடை ஆசான்
உலகுக்குக் கிடைத்தது ஒருபெரும் வரமே!
அன்னார் ஆற்றிய அருமைத் தொண்டை
எண்ணிப் பார்த்தால் இதயம் வலிக்கும்
கல்விச் செல்வத்தைக் கணக்கின்றி வழங்கி
பல்லோரும் போற்றப் பாரினில் வாழ்ந்தார்
பண்டிதர் என்ற பட்டம் பெற்றும்
பண்பொடு பழகிப் பேறு பெற்றவர்
அரச பதவியை அடைந்த போதிலும்
தரமாய்ச் சேவையைத் தந்தே சென்றவர்
பாடசாலை ஆசானாய் பணியில் பணியாற்றி
தேடவொண்ணாச் செல்வமெனச சான்றிதழ் பெற்றார்.
கவிதை இலக்கணம் கசடறக் கற்பித்தே!
கவிஞர் பலரைக் கனடாவில் உருவாக்கி
தன்னார்வத் தொண்டனாய்த் தமிழைக் கற்பித்து
தன்னிகர் இல்லாத் தலைவனாய் உயர்ந்தவர்
சொந்தம் கூடியே சோகத்தில் ஆழ்ந்திட
பந்துகள் சேர்ந்து பதறி நிற்கவே!
மாணவர் யாவரும் மனதில் அழுதிட
வானவன் ஏன்தான் விரைந்து அழைத்தான்?
அலெக்சாந் தரென்றொரு அறிவுடை ஆசான்
பலபேர் பதறிடப் பரகதி சென்றதேன்?
அன்னார் ஆன்மா ஆண்டவர் அடைய
கண்ணீர்த் துளியால் காணிக்கை அளிப்போமே!*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844 – 7453**


கனேடிய மண்ணில் மாபெரும் கண்டனப்போராட்டம்
செம்மணி எழுச்சி – அணையா தீபம்
விழித்தெழு
தமிழா
உரிமைக் குரல் கொடுக்க அனைத்து
தமிழரும் வாரீர்...
26
ஜூலை
ALBERT
CAMPBELL
SQUARE
150 Borough Dr,
Scarborough, ON M1P 0B1
5 PM
ONWARDS
தொடர்புகளுக்கு
+1 647 532 1189 | +1 416 898 7284 | +1 647 302 1189
ORGANIZED BY BEHIND ME MEDIA & BEHIND ME FOUNDATION

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






Tamil one
PRESENTED BY Muhurtham Jewels
POWERED BY PHYSIO KING
SV MEDIA
CO-PRESENTED BY ROYAL LEPAGE ignite

# MEGABLAST
2025 CELEBRATING SOUTH ASIAN TASTE & CULTURE

## VENUE
**SHEPPARD AVENUE EAST, DEAN PARK ROAD TO MEADOWVALE**




## 2-DAY STREET FESTIVAL
## AUGUST 9TH & 10TH

FREE EVENT

For more info Hotline: +1 416 389 7078

FREE PARKING

GT Brokers · AERO COURIER · INK DRIP · GUNAAMS SUPERMARKET · IDEAL · THE DESIGN WOLF.COM



NISSAN | VILLAGE NISSAN

# தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் ஆடிப்பூர கஞ்சிக்கலச சிறப்பு பூசை

குருவடி சரணம் திருவடி சரணம்



மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும்
மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

27-07-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி முதல் ஆடிப்பூர கஞ்சிக்கலச சிறப்பு பூசைகள் நடைபெற்று 11:00 மணியளவில் கஞ்சிக்கலசம் வீதிவலம் நடைபெற்று சிறப்பு ஆராதனை நடைபெற்று மகேஸ்வர பூசையுடன் முடிவடையும். அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ஆடிப்பூரகஞ்சி எடுப்பவர்கள் முன்கூட்டியே அறிவித்தும் பதிவுசெய்யலாம்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647



ஓம் சக்தி துணை

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

## சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்

585 Middlefield Rd, Unit 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH)
tel: 416 535-6560



அம்மன்

# பிரம்மோற்சவ பெருவிழா 2025

## அம்மன் திருவிழா

(01.08.2025 வெள்ளி முதல் 20.08.2025 புதன் வரை)

திருவிழா நிகழ்ச்சி நிரல்



| | |
|---|---|
| 01.08.2025 | வெள்ளி நண்பகல் 11மணிக்கு கொடியேற்றம் |
| 08.08.2025 | வரலட்சுமி பூஜை - மாலை 7:00 மணிக்கு |
| 10.08.2025 | மாம்பழத் திருவிழா - ஞாயிறு காலை 10 மணிக்கு<br>சதுர் சஷ்டி உபசாரபூஜை - மாலை 7:00 மணிக்கு (64 உபசாரம்) |
| 12.08.2025 | மஞ்சத் திருவிழா - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 14.08.2025 | வேட்டை திருவிழா - வியாழன் மாலை 6 மணிக்கு |
| 15.08.2025 | சப்பரத் திருவிழா - வெள்ளி மாலை 8 மணிக்கு |
| 16.08.2025 | தேர்த்திருவிழா - சனி காலை 11:30 மணிக்கு |
| 17.08.2025 | தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு<br>கொடியிறக்கம் - மாலை 8 மணிக்கு |
| 18.08.2025 | பிராயச்சித்தம் அபிஷேகம் - திங்கள் காலை 9 மணிக்கு<br>திருக்கல்யாண உற்சவம் - திங்கள் மாலை 8 மணிக்கு |
| 19.08.2025 | பூங்காவனம் - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 20.08.2025 | வயிரவர் மடை புதன் மாலை 7 மணிக்கு |




அனைவரும் வருக - அன்னையின் அருள் பெருக


DISCOVER
THE LION IN YOU
LION
EXTRA
STRONG BEER
STOUT
ENDORSED BY THE
GREAT BEER HUNTER,
MICHAEL JACKSON
ONLY STOUT IN ASIA TO BE
LISTED IN 300 BEERS TO TRY
BY ROGER PROTZ
99/100 ratebeer
AVAILABLE IN 473ML CANS AT
LCBO
LCBO.COM
BEER STORE
THEBEERSTORE.CA
FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020
OR EMAIL:
FRED@FINEBEERS.CA

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சம்பூர் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக நிபுணர் அறிக்கைக்கு கோரிக்கை



கிழக்கு மாகாணத்தில் அரசாங்கப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் கிராமவாசிகள் குழுவை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னத் திற்கு அருகில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இடம் குறித்து ஒரு வாரத்திற்குள் இரண்டு நிபுணர் அறிக்கைகளை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்திற்கு அந்த இடத்தின் வரலாறு குறித்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட்ட மூதூர் நீதவான், அகழ்வாய்வு தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து அறிக்கை கோரியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் கண்ணிவெடி குறித்த நிபுணர்களின் உதவியை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் கடற்கரையில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பிரிட்டனை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனம் ஜூலை 20 அன்று ஒரு மண்டை ஓடு மற்றும் பிற எலும்புகளைக் கண்டுபிடித்தது.

இதனையடுத்து பணிகளை இடைநிறுத்த உத்தரவிட்ட மூதூர் பதில் நீதவான், புதன்கிழமை (23) அந்த இடத்தில் அகழ்வாய்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நான்கு அரசு நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார்.

இதற்கமைய, புதன்கிழமை தினம் (ஜூலை 23) அரச பகுப்பாய்வுத் திணைக்களம், திருகோணமலை சட்ட வைத்திய அதிகாரி, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், தொல்பொருள் திணைக்களம், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் (OMP) மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அந்த இடத்திற்கு வருகைத்தந்திருந்தனர்.

இடத்தை ஆய்வு செய்த மூதூர் நீதிபதி எச்.எம். தஸ்னீம் பௌஸான், மனித மண்டை ஓடு மற்றும் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் ஒரு மயானம் இருந்ததா என்பது குறித்து ஜூலை 30 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிக்கை அளிக்குமாறு தொல்பொருள் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

சம்பூர் கடற்கரையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் பிரிட்டனை தளமாகக் கொண்ட மெக் (MAG) உடன் கலந்துரையாடி, மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் எவ்வாறு அகழ்வாய்வுகளை மேற்கொள்ள முடியும் என்பது குறித்து ஜூலை 30 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு திருகோணமலை சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சம்பூர் கடற்கரையில் உள்ள சிறுவர் பூங்கா அருகே மனித மண்டை ஓடு மற்றும் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

57 பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரியூட்டியும் கொலை செய்யப்பட்ட, இலங்கை இராணுவத்தின் மீது குற்றம் சாட்டப்படும், ஜூலை 7, 1990 சம்பூர் படுகொலையின் நினைவாக பாதிக்கப்பட்ட கிராம மக்களால் அமைக்கப்பட்ட நினைவுச்சின்னத்திலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# தாவடியில் தாவடி கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது!



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, தாவடியில் அமைந்துள்ள மதுபானசாலை முன்பாக 23ம் திகதி அன்றையதினம் இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் வியாழக்கிழமையன்றையதினம் மண்டைதீவு பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் கத்திக் குத்துக்கு இலக்காகி சுதுமலை மத்தி, மானிப்பாயைச் சேர்ந்த நே.சர்வேந்திரன் வயது (45) என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார். தாவடியில் அமைந்துள்ள மதுபானக் கடைக்கு அருகில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது காயமடைந்த நபர் மயக்கமடைந்து, வயிறு மற்றும் இடது கையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்மியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில் வியாழக்கிழமை பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ததுடன் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் தற்காலிக வியாபார நிலையங்களை அகற்றும் நடவடிக்கை!

மக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் தற்காலிக வியாபார நிலையங்களை அகற்றுதல் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்புறத்தில் நடைபாதையில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை வியாபார நிலையங்களையும் அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொண்டுள்ளதாக தவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் குறித்த நடைபாதையில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை வியாபார நிலையங்களையும் எதிர்வரும் 30.07.2025 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அகற்றுமாறும் அதனை மீறி வியாபாரங்களில் ஈடுபடுகின்றவர்களின் அத்தனை வியாபார நிலையப் பொருட்களும் எதிர்வரும் 30.07.2025 ஆம் திகதி புதன்கிழமை சபையினால் கையகப்படுத்தப்படும்.

அத்துடன் குறித்த நடைபாதையில் பயணிப்பவர்களுக்கு இடையூராக இருக்கின்ற அத்தனை விடயங்களையும் அகற்றுவதோடு நடைபாதையில் வாகனங்கள் நிறுவத்துவதும் முற்றாக தடை செய்யப்படுகின்றது. குறித்த அறிவித்தலினை மீறி வாகனங்களை நிறுத்துவோர் மீது போக்குவரத்துப் பொலிசார் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் "மூன்றாவது பெரிய" மனித புதைகுழியாக மாறியது செம்மணி!

நான்கு அல்லது ஐந்து வயது மதிக்கத்தக்க பிள்ளைகளின் எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி, அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டின் மூன்றாவது பெரிய புதைகுழியாகும்.

2025 மே மாத நடுப்பகுதியில் இருந்து செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் இதுவரை 85 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அவற்றில் சிறுவர்களின் எச்சங்களும் அடங்கும்.

முன்னர் அடையாளம் காணப்பட்ட மூன்றாவது பெரிய மனித புதைகுழி மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழி ஆகும், 2023 இல் அந்த புதைகுழியில் 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இரண்டாம் கட்ட அகழ்வாய்வின் 18ஆவது நாளான இன்று (ஜூலை 23) செம்மணி மனித புதைகுழி வளாகத்தில் இருந்து ஐந்து புதிய மனித மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் ஊடங்களுக்குத் தெரிவித்தார்.

"புதிதாக ஐந்து மண்டையோடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று நாட்களும் மொத்தமாக 20 மண்டையோடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 2 மண்டையோடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. மொத்தமாக 67 மண்டையோடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன."



நீதிமன்றத்தால் குற்றப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் 85 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, இன்றைய தினம் வரையில் 67 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.



இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள சதொச புதைகுழி ஆகும், அங்கு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில், இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது பெரிய புதைகுழியாகக் கருதப்படும் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒரு இடத்திலிருந்து 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.


இலங்கையில் நான்காவது பெரிய மனித புதைகுழியாக மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழி தற்போது மாறியுள்ளது. அங்கு 82 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் புதைகுழியிலிருந்து 52 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட பின்னர் அகழ்வாராய்ச்சி பணிகள் நிறைவடைந்தன. ஒரு வருடத்திற்கு முன்னர், கொழும்பு துறைமுகத்திற்கு செல்லும் புதிய அதிவேக வீதியின் நிர்மாணத்திற்காக நிலம் தோண்டப்பட்டபோது, ஜூலை 13, 2024 அன்று முதல் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கொழும்பு துறைமுகத்தில் உள்ள பழைய செயலக வளாகத்தில் இருந்து மீட்கப்பட்ட மொத்த மனித எலும்புகளின் எண்ணிக்கை இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்தப் மனித புதைகுழிகள் அனைத்தும் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த 17 ஆம் திகதி, கொழும்பில் பொலிஸ் தடைகளுக்கு மத்தியில் நடைபெற்ற போராட்டத்தின் போது, தொழிற்சங்கத் தலைவர்களும் வெகுஜன அமைப்புகளும் நாடு முழுவதும் சிதறிக்கிடக்கும் இருபதுக்கும் மேற்பட்ட மனித புதைகுழிகள் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தின.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



# "மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்கும்...ஆனால் நடக்காது"

***"மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த, அந்த ஒப்பந்தத்தின் பயனாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரித்த, மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது என்ற கொள்கையை வரித்த இந்த அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. – தே.ம.ச. ஆட்சியாளர்கள் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எந்தளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள்?"***

**– – கே. பாலா – –**

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் ,பாராளுமன்றத்தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் என 3 தேர்தல்கள் அடுத்தடுத்து நடந்து முடிந்துள்ள நிலையில் பல வருடங்களாக நடத்தப்படாதுள்ள நாட்டிலுள்ள 9 மாகாணசபைகளுக்கான தேர்தலையும் உடனடியாக நடத்த வேண்டுமென்ற வலியுறுத்தல்கள் அண்மைய நாட்களாக மேலெழுந்து வருகின்றன.

இலங்கையில் தமிழர்களின் தனி நாடு கோரிய ஆயுதப் போராட்டமே மாகாண சபை ஆட்சி முறைக்கு வித்திட்டது. இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987 அக்டோபர் 29 ஆம் திகதி கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய இலக்கு இலங்கை அரசு அதன் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாகவே இருந்தது. இதன் படி 1987 நவம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது.

1988 பெப்ரவரி 3 ஆம் திகதி இலங்கையில் மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், வடக்கு மாகாணம், வடமேற்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம் என 9 மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. மாகாணசபைகளுக்கான முதலாவது தேர்தல் 1988 ஏப்ரல் 28 ஆம் திகதி வடமத்திய, வடமேல், சப்ரகமுவ, மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக 1988 ஜூன் 2 ஆம் திகதி மத்திய, தென், மற்றும் மேல் மாகாணங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்பின்னர் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் 1988 நவம்பர் 19 ஆம் திகதி நடத்தப்பட்டது.

மாகாண சபையின் பதவிக் காலம் 5 வருடங்களாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 1993 ஆம் ஆண்டில் இரண்டாவது மாகாணசபைத்தேர்தலும் 2004 ஆம் ஆண்டில் மூன்றாவது மாகாணசபைத் தேர்தலும் முதலில் ஒரே தடவையில் நடத்தப்பட்ட நிலையில் பின்னர் தேர்தல்கள் பிரித்து பிரித்து நடத்தப்பட்டதால் 2008 - 2009 ஆம் ஆண்டுகளில் நான்காவது மாகாணசபைத் தேர்தலும் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்த மாகாண சபைத்தேர்தல்களும் இடம்பெற்றன.

இறுதியாக இடம்பெற்ற மாகாணசபைக்கான தேர்தல்களை பார்ப்போமானால் 27-06-2012 இல் கிழக்கு, சப்ரகமுவ, மற்றும் வடமத்தி ஆகிய மூன்று மாகாணசபைகளும் கலைக்கப்பட்ட நிலையில் 08-09-2012 இல் இவற்றுக்கு தேர்தல் நடைபெற்றது. மூன்று மாகாணங்களிலும் 108 பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட இத்தேர்தலில் மூன்று மாகாணங்களில் சப்ரகமுவ, மற்றும் வடமத்திய மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மையை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. கிழக்கு மாகாணத்தில் மொத்தமுள்ள 37 உறுப்பினர்களில் இம்முன்னணி 14 உறுப்பினர்களுடன் முதலாவதாக வந்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சி 11 உறுப்பினர்களுடன் இரண்டாவதாக வந்தது. எனினும் கிழக்கு மாகாணத்தில் 7 இடங்களைக் கைப்பற்றிய முஸ்லிம் காங்கிரஸ் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவுடன் ஆட்சியமைத்தது.

மத்திய, மற்றும் வடமேல் ஆகிய மூன்று மாகாண சபைகளும் 2012 ஜூலை மாதத்தில் கலைக்கப்பட்ட நிலையில் 21-09 2013இல் தேர்தல் நடைபெற்றது. வடக்கு மாகாண சபைக்கும் இதே தினத்தில் முதற் தடவையாகத் தேர்தல் இடம்பெற்றது. 3 மாகாணசபைகளுக்கும் 148 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் வடக்கிலிருந்து 38 உறுப்பினர்களும், மத்திய மாகாணத்திலிருந்து 58 பேரும், வடமேல் மாகாணத்திலிருந்து 52 பேரும் தெரிவாகினர். வட மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 இடங்களைக் கைப்பற்றி ஆட்சியமைத்தது. மத்திய, வடமேல்மாகாண சபைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி கைப்பற்றியது.

மேற்கு மற்றும் தெற்கு ஆகிய இரண்டு மாகாண சபைகளும் 2014 ஜனவரி மாதத்தில் கலைக்கப்பட்ட நிலையில் 2014 மார்ச் 29 இல் தேர்தல் நடைபெற்றது. 159 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற இந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி தெற்கு, மற்றும் மேற்கு மாகாண சபைகளைக் கைப்பற்றியது. ஊவா மாகாணசபை 2014 ஜூலை 11 இல் கலைக்கப்பட்டநிலையில் 2014 செப்டம்பர் 20 இல் தேர்தல் நடைபெற்றது. 34 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான இந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 19 ஆசனங்களை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இவ்வாறான நிலையில் மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த போதும் இதுவரையில் இந்த மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை. மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் பத்தாம் சரத்து மற்றும் அரசமைப்பின் 154 ஈ உறுப்புரை ஆகியனவற்றின்படி, மாகாண சபையொன்றின் பதவிக்காலம் நிறைவடைந்து, அந்த மாகாணசபை கலைந்த நாளிலிருந்து, நான்கு வார காலத்துக்குள், குறித்த மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான அறிவித்தலை, தேர்தல் ஆணைக்குழு விடுக்க வேண்டும். ஆனால், மாகாண சபைகள் கலைந்து பல வருடங்களுக்கு மேலாகியும் இன்றுவரை மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்படவில்லை.

இவ்வாறு எந்தவொரு மாகாண சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படாத நிலையில் மாகாணசபைகள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. இதனைப் பயன் படுத்தி ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும் தமக்கு விசுவாசிகளான ஆளுநர்களை ஒவ்வொரு மாகாணங்களுக்கும் நியமித்து தமது நோக்கங்கள், தேவைகள், திட்டங்கள், இலக்குகளை இலகுவாக அடைந்து கொள்ளும் நிலையே கடந்த பல வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றன.

இதற்கிடையில் கடந்த கோத்தபாய ராஜபக்ச அரசிலும் இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்' தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியதையடுத்து கட்சித் தலைவர்களின் இணக்கப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரவை கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான யோசனை, அப்போதைய பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனால் முன்வைக்கப்பட்டு ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இவ்வாறு ஒருபுறம் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் கோத்தபாய ராஜபக்ச அரசு அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிக்கொண்டு மறுபுறம் மாகாணசபைகளுக்கான மூலாதாரமான 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படவேண்டும், மாகாணசபைக்கான தேர்தல்கள் நடத்தப்படக்கூடாதென்ற இனவாதக் கருத்துக்களையும் கோத்தபாய அரசு தட்டி எழுப்பிவிட்டது.மாகாண சபைகள் வெள்ளை யானைகளாக இருப்பதாக அரச தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டனர். கோத்தபாய அரசின் அமைச்சரவைக் கூட்டத்திலும் அப்போதைய முக்கிய அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர ஆகியோர் மாகாணசபைகளுக்கான தேர்தல்கலை நடத்த கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதுடன் மாகாணசபை முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவோம், மாகாணசபை முறைமையை ஒழிப்போம் என்று வாக்குறுதி கொடுத்துத்தான் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத்தேர்தலில் வெற்றி பெற்றோம். எனவே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தி ஜசிங்களஸமக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நாம் மீறக்கூடாது எனவும் அவர்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு சுட்டிக்காட்டினர். இந் நிலையில் கோத்தபாய ராஜபக்ச அரசு மக்கள் போராட்டத்தினால் விரட்டப்பட்டதனால் மாகாணசபைகளுக்கான தேர்தல் முயற்சிகளும் காணாமல் போய்விட்டன.

இவ்வாறான நிலையில் மீண்டும் தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற வலியுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. மாகாணசபை முறைமையை முற்றாக இல்லாமல் செய்வதற்கே சிங்கள தேசியக் கட்சிகள் விரும்புவதாகச் சுட்டிக்காட்டிய தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதற்கு இடமளிக்காமல் மாகாணசபைத்தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன. அதுமாத்திரமன்றி தற்போது தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியனால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மாகாணசபைத்தேர்தல் திருத்தச்சட்டம் தொடர்பான தனிநபர் பிரேரணையானது ஏற்கனவே 2023 இல் தேசிய மக்கள் சக்தி ஏகமனதாக ஏற்றுக்கொண்ட அதே தனிநபர் பிரேரணை தான் எனச் சுட்டிக்காட்டிய அவர்கள், ஆகவே சாணக்கியனின் தனிநபர் பிரேரணை குறித்து ஆராயவேண்டும் என காலத்தை இழுத்தடிக்காமல் அரசாங்கம் அதனை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றன.

இவ்வாறான நிலையில்தான் மாகாணசபைத்தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாகாணசபைத்தேர்தல் விவகாரத்தில் சட்ட ரீதியான சில தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அதன்படி அமைச்சு மட்டத்தில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால் 2017 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட மாகாணசபைத்தேர்தல் திருத்தச்சட்டமூலம் மற்றும் மாகாணசபைத்தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் 2019 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தமிழரசுக்கட்சியின் எம்.பி. சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணை என்பன தொடர்பில் விசேட அவதானம்செலுத்தி ஆராய்ந்து வருகிறோம். இதுகுறித்து சகல தரப்பினருடனும் வெளிப்படைத்தன்மையுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம் என தற்போதைய மாகாணசபைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

ஆனால் மாகாணசபைத்தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டு தான் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை, பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இருப்பினும் 2023 ஆம் ஆண்டில் மீண்டும் அதனையே தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்ததாகவும் கூறிய சுமந்திரன், "2023 இல் சமர்ப்பித்த மாகாணசபைத்தேர்தல் சட்டத்திருத்தம் குறித்த தனிநபர் பிரேரணை முதலாம் வாசிப்பைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. அதனையடுத்து உயர்நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, பாராளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் அப்பிரேரணை தேசிய மக்கள் சக்தி உள்ளடங்கலாக சகல தரப்பினரதும் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்னர் மூன்றாம் வாசிப்பு நிகழ்ச்சிநிரலில் இருந்து நீக்கப்பட்டதன் விளைவாகவே அப்போதும் அப்பிரேரணையை நிறைவேற்றமுடியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் அந்தப் பிரேரணையே தற்போது இரா. சாணக்கியனால் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அதுகுறித்து மீண்டும் புதிதாக ஆராயவேண்டிய அவசியமில்லை. மாறாக அதனை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கின்றார்.

ஆனால் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்ட, அந்த ஒப்பந்தத்தின் பயனாக இணைக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நீதிமன்றத்தை நாடி துண்டித்த, மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்ற கொள்கையை வரித்துக்கொண்ட இந்த அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எந்தளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் அல்லது நடவடிக்கை எடுப்பார்கள் என்பதே இன்றுள்ள கேள்வி. மைத்திரி-ரணில் நல்லாட்சியில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்க முற்பட்டபோது எதிர்த்தவர்கள், கோத்தபாய ஆட்சியில் மாகாணசபைகளுக்கு தேர்தலுக்கான முயற்சிகள் என்ற நாடகம் நடத்தப்பட்டபோதுகூட அந்த நாடகத்தையே முழு மூச்சாக எதிர்த்தவர்கள் இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் இருக்கும்போது அதனை நடத்த விரும்புவார்களா? அல்லது தமது இனவாத அரசியலை முன்னெடுக்க சந்தர்ப்பம் பார்த்து காத்திருக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர மற்றும் மகாசங்கத்தினர் தான் விடுவார்களா.? மாகாணசபைகளுக்கான தேர்தலை வைத்தே அநுரகுமார அரசுக்கு அவர்கள் புதைகுழி தோண்டி விடுவார்கள்.

அதுமட்டுமல்ல ஜனாதிபதித்தேர்தலிலும் பாராளுமன்றத்தேர்தலிலும் பெரு வெற்றி பெற்ற அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியினர் சில மாதங்களில் நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மக்களின் ஆதரவை கணிசமானளவு இழந்து தோல்விப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் நிலையில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தி மீண்டுமொரு படுதோல்வியை சந்திக்க விரும்பமாட்டார்கள். ஆகவே மாகாண சபைக்களுக்கான தேர்தல் சட்டத் திருத்தத்தை "துருப்பு சீட்டாக" பயன்படுத்தி மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது இழுத்தடிக்கவே முடிந்தளவுக்கு முயற்சிப்பார்கள். எனவே தற்போதைய இலங்கையின் அரசியல் களத்தில் "மாகாணசபைகளுக்கான தேர்தல் நடக்கும்,,,ஆனால் நடக்காது" என்ற நிலையே உள்ளது.

# காமராஜர் என்னும் பெருந்தலைவரின் நிழலில்





மனமாற நான் போற்றிப் பின்பற்றிய பெருந்தலைவர் அவர்களின் நினைவுகள் குறித்து நூல் எழுதி அவரது நூற்றாண்டு விழாவின் போது 2002ஆம் ஆண்டில் வெளியிட வேண்டும் என திட்டமிட்டிருந்தேன். ஆனால், கொடிய கருப்புச் சட்டத்தின் கீழ் நான் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த காரணத்தினால் அம்முயற்சி தடைப்பட்டது. சிறையில் நான் இருந்தபோது, எனது வீட்டை சோதனை செய்த காவல்துறையினர் பல ஆவணங்களை அள்ளிச் சென்றனர். பெருந்தலைவர் பற்றிய சில குறிப்புகளும் அவற்றில் அடங்கும். காவல்துறையினருக்கு அவற்றால் எந்தப் பயனும் இல்லை. ஆனாலும், அவை மறுபடியும் எனது கைக்குக் கிடைக்கவில்லை. எனவே, நினைவில் இருந்தவற்றைக் கொண்டு சில அத்தியாயங்களை எழுதவேண்டியிருந்தது. இதன் விளைவாக சில நிகழ்ச்சிகளும் அவற்றோடு தொடர்புகொண்ட காமராசர் தொண்டர்களைப் பற்றிய செய்திகளும் விடப்பட்டிருந்தால் பொறுத்தருள வேண்டுகிறேன்.

எந்தவொரு நாட்டின் வரலாற்றிலும் அந்த நாட்டு மக்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டவும், அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவும் கொடுங்கோலாட்சிகளை வீழ்த்தவும் நடத்திய போராட்டங்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியத் துணைக் கண்டம் தனது தளைகளை உடைத்தெறிய அறவழியில் நடத்திய போராட்டம் ஈடு இணையற்றதாகும். அப்போராட்டம் குறித்தும், அதற்குத் தலைமை தாங்கியவர்கள் குறித்தும் ஏராளமான நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

காந்திய சகாப்தத்தின் தேச விடுதலைப் போரில் ஈடுபட்ட தியாகத் தலைவர்கள் பலரும் மேட்டுக்குடிகளில் பிறந்தவர்கள். மேனாட்டுக் கல்வி கற்றவர்கள். இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர் பெருந்தலைவர் காமராசர். எளிய குடியில் பிறந்த அவர் விருதுப்பட்டியில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க முடியாத நிலையில் ஏழ்மையில் வாடியவர். ஆனாலும் தனது ஈடு இணையற்ற தொண்டினாலும், அளப்பரிய தியாகத்தினாலும் அகில இந்திய காங்கிரசுத் தலைவர் பதவி வரை உயர்ந்தவர்.

1903ஆம் ஆண்டு சூலை மாதம் 15ஆம் நாள் பிறந்த காமராசர் தனது 16ஆம் வயதில் அதாவது, 1919ஆம் ஆண்டில் காந்தியத் தொண்டராகத் தனது பொது வாழ்க்கையைத் தொடங்கினார். அந்நிய ஆட்சியில் 6 முறை சிறை சென்றார். 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைகளில் வாடினார். 21 ஆண்டுகள் தொண்டராகத் திகழ்ந்து 1940ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக ஆனார். 12 ஆண்டுகள் யாராலும் அசைக்க முடியாத தலைவராக விளங்கி, தமிழக அரசியலில் என்றும் அழியாத முத்திரையைப் பொறித்தார்.

தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி, அந்த நாளில் மேல்சாதி ஆதிக்கப் பிடியில் கட்டுண்டு கிடந்தது. அதற்கு எதிராகப் போராடித்தான் பெரியார் ஈ.வே. இராமசாமி அவர்கள் காங்கிரசு கட்சியிலிருந்து வெளியேறினார். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற போது காமராசர் மிகப் பிற்பட்ட சாதியைச் சேர்ந்த இளம் தொண்டர். ஆனாலும், மனம் தளராமல் பெரியார் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்தார். காங்கிரசுக் கட்சிக்குள்ளிருந்தே சாதி ஆணவத்தின் அவமதிப்பையும், புறக்கணிப்பையும் சந்தித்தார். அவரை அசைத்து விரட்ட சாதி ஆணவக்காரர்கள் எவ்வளவோ முயன்றனர். பொதிகை மலை போல காமராசர் கொஞ்சமும் அசைக்க முடியாதபடி உறுதி வாய்ந்த தலைவராகத் திகழ்ந்தார். "தமிழ்நாட்டில் அவர்தான் காங்கிரசு, காங்கிரசுதான் அவர்" என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

1954 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 தமிழ்ப் புத்தாண்டு நாளில் அவர் தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

ஒன்பதாண்டுக் காலம் அப்பதவியில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் திகழ்ந்தார். அவரது ஆட்சிக் காலத்தைத் தமிழகத்தின் பொற்காலம் என மாற்றுக் கட்சியினரும் மதித்துப் போற்றினர். அவரது ஆட்சி கல்வி, தொழில், வேளாண்மை, மின் உற்பத்தி ஆகிய துறைகளில் ஆற்றிய சாதனைகள் இன்றுவரை எந்த ஆட்சியாளராலும் மிஞ்சப்படவில்லை. இவ்வளவுக்கும் அவர் முதல்வராக பொறுப்பேற்ற போது தமிழக அரசின் வரவு - செலவுத் திட்டத்தின் மொத்தத் தொகை ரூ. 47.18கோடி மட்டுமே. அவர் பதவி விலகிய போது வரவு - செலவுத் திட்டத்தின் மொத்தத் தொகை ரூ.121.81 கோடி மட்டுமே. இந்த சிறிய தொகையைக் கொண்டு பெரும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார். இப்போது தமிழக அரசின் மொத்த வரவு - செலவுத் திட்டத் தொகை சுமார் ரூ. 2 இலட்சம் கோடிகளாகும். ஆனாலும், காமராசரின் சாதனையை மிஞ்ச முடியவில்லை.

1963 ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாளில் அவராகவே விரும்பிப் பதவியைத் துறந்து, கட்சிப் பணியில் ஈடுபட முன்வந்தபோது தலைமையமைச்சர் நேரு வியந்து போனார். காமராசரின் வழியைப் பின்பற்றி தாமும் பதவி விலகத் தீர்மானித்தார். ஆனால், காங்கிரசுச் செயற்குழு நேருவின் பதவி விலகலை ஏற்க மறுத்தது. காமராசர் காட்டிய வழியில் மேலும் பல முதலமைச்சர்களும் மத்திய அமைச்சர்களும் பதவிகளைத் துறந்தார்கள்.

காமராசரின் தொண்டு தமிழ்நாட்டிற்கு மட்டுமன்று, இந்தியா முழுமைக்குமே தேவை என்பதை அனைவரும் உணர்ந்தனர். அதன் விளைவாக, காமராசர் புவனேசுவரம் காங்கிரசு மாநாட்டில் அகில இந்தியக் காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவர் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, காக்கும் கரங்களில் நாட்டை ஒப்படைத்துவிட்டோம் என்ற மனநிறைவுடன் நேருவும் மறைந்தார்.

இமயம் போன்ற தலைவர் நேருவின் மறைவுக்குப் பிறகு வாரிசு உரிமைப் போரில் இந்தியா சிதறுண்டு போகும், சனநாயகம் சீரழியும், சர்வாதிகாரம் தலைதூக்கும் எனப் பலர் ஆருடம் கூறியதுண்டு. ஆனால் அவ்வளவையும் பொய்யாக்கி நேருவுக்குப் பிறகு லால்பகதூர் சாஸ்திரியையும் அவரது திடீர் மறைவுக்குப் பிறகு இந்திராகாந்தியையும் சனநாயக முறையில் பிரதமர்களாகத் தேர்ந்தெடுக்க வழிவகுத்த பெருமை காமராசருக்கு மட்டுமே உண்டு. இந்தியாவின் முதலாவது பிரதமரான சவகர்லால் நேருவை காந்தியடிகள் தேர்ந்தெடுத்தார். நேருவுக்கு அடுத்த இரு பிரதமர்களைக் காலா காந்தியான காமராசர் தேர்ந்தெடுத்தார்.

இதைக் கண்டு உலகம் வியந்தது. பாமரன் போலக் காட்சி தரும் இந்த எளிய மனிதரிடம் இராசதந்திரமும் எஃகு போன்ற மனஉறுதியும் குடிகொண்டிருப்பதைப் பார்த்து அனைவருமே திகைத்துப் போனார்கள். உலக வல்லரசுகள் அவரைப் பற்றி அறிவதில் நாட்டம் கொண்டன. நேருவை மட்டுமே அறிந்திருந்த உலகம், அவருக்குப் பின் இந்தியாவை வழி நடத்திச் சென்ற மாபெரும் தலைவர் காமராசரைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள வேண்டுமென்று துடித்தது இயல்பானதேயாகும். சோவியத் நாடு, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் அவரைத் தங்கள் நாடுகளுக்கு அழைப்பதில் போட்டியிட்டன. அவரும் அந்த அழைப்பினை ஏற்று சோவியத் நாடு மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே சென்று வந்தார்.

உலகமறிந்த ஒரு தலைவராக உயர்ந்த நிலையில் 1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் சறுக்கல் ஏற்பட்டது. சோசலிசத்திற்கு எதிரான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் கைகோர்த்து இதற்குப் பின்னணியில் நின்றன. இந்தியாவின் பிரதமர் பதவியிலிருந்து மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் பதவி வரை அவரால் முடிசூட்டப்பட்டவர்கள் ஏராளம். முடிபெ ஆயமநச எனப் பாராட்டப்பட்ட காமராசர், விருதுநகரில் ஏற்பட்ட சறுக்கலின் விளைவாக மனம் தளர்ந்துவிடவில்லை. "மக்கள் தீர்ப்பை மதித்து ஏற்கிறேன்" என்று சொல்லக்கூடிய சனநாயகப் பேருள்ளம் அவருக்கு இருந்தது. வேறு யாராக இருந்திருந்தாலும் இத்தகைய சரிவு ஏற்பட்டபோது மனமுடைந்து அரசியல் வாழ்வையே துறந்திருப்பார்கள்.

தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் பதவி, தமிழக முதலமைச்சர் பதவி, அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் பதவி ஆகியவற்றை அவர் ஒருபோதும் நாடிச் செல்லவில்லை. அப்பதவிகள் அவரைத் தேடி வந்து பெருமைப் பெற்றன. இன்னும் சில ஆண்டுகள் பதவியில் அவர் நீடிக்கவேண்டும் என மக்களும், பல தலைவர்களும் வேண்டியபோது தானாகப் பதவியைத் துறந்து வெளியேறும் தன்னலமற்றத் துறவியாகத் திகழ்ந்தார். தலைமையமைச்சர் பதவி அவரைத் தேடி வந்தபோதும்கூட ஏற்க மறுத்தவர் அவர்.

இந்த மாபெரும் தலைவரின் நிழலில் அரசியல் குருகுலவாசம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது நான் பெற்ற பெரும்பேறாகும். அவரோடு மிக நெருங்கிப் பழகிய அந்த நாட்கள் மறக்க முடியாதவை. அவரது உயர்ந்த பண்பாடுகளையும், சிறந்த எண்ண ஓட்டங்களையும் அறிந்துகொள்ள நேர்ந்தபோதெல்லாம் நான் சிலிர்த்துப் போயிருக்கிறேன். அத்தகைய நிகழ்ச்சிகளை இந்நூலில் பதிவு செய்துள்ளேன்.

இந்நூல் அவரது வாழ்க்கை வரலாற்று நூல் அன்று. பல நண்பர்கள் பல கோணங்களில் அவரது வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி மிகச்சிறந்த நூல்களைப் படைத்துள்ளனர். அவரின் அன்பிற்குரிய தொண்டனாக நான் பணியாற்றிய போது நேரில் கண்டு கேட்டுணர்ந்த நிகழ்ச்சிகளை இந்நூலில் பதவி தந்துள்ளேன்.

கானினும் பெரியர் ஓசைக் கடலினும் பெரியர் சீர்த்தி
வானினும் பெரியர் மேனி மலையினும் பெரியர் மாதோ.

(சுந்தரகாண்டம் -758)

என கம்பன் தனது காவியத்தில் பாடியதைப் போல பெருந்தலைவரின் பேருருவமாண்பினை என் போன்ற எளியவனால் முழுமையாக எடுத்துரைக்க இயலாது. எனினும், விடுதலைப் போராட்டக் காலத்தில் அவரோடு தோள்கொடுத்துத் துணை நின்று, சிறைகளிலும் உடனிருந்த தோழர்கள், முதலமைச்சராக அவர் இருந்தபோது அவரின் கீழ் பணியாற்றிய உயர் அதிகாரிகள் நட்புணர்வோடு அவரோடு பழகிய தலைசிறந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், அவர் இட்டப் பணியினைச் செய்வதற்குக் காத்துக்கிடந்த செல்வர்கள் போன்ற பலர் என்னிடம் பகிர்ந்துகொண்ட நினைவுகளையும் இந்நூலில் பதிவு செய்து காலம் எனக்கு இட்ட வரலாற்றுக் கடமையினை ஓரளவு நிறைவு செய்துள்ளேன்.

("பெருந்தலைவரின் நிழலில்" என்னும் தலைப்பில் பழ. நெடுமாறன் எழுதிய நூலின் முன்னுரை)



இலங்கை செய்திகள்
Sri Lanka News

G. f[pe;jd;

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா!



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா 19ம் திகதி அன்று சனிக்கிழமைமானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.

புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாண மாவட்ட செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், அகில இலங்கை இந்துமாமன்றம், யாழ்ப்பாண தமிழச்சங்கம், மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியன இணைந்து இந்த துறவற நூற்றாண்டு விழாவினை ஏற்பாடுசெய்திருந்தன.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக இலங்கைப் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கலந்துகொண்டதுடன் வடமாகாண ஆளுனர் நாகலிம்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், வைத்தியரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.ஸ்ரீபவானந்தராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், பிரதேச செயலர்கள், செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், ஆசிரியர்கள் மாணவர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து பண்பாட்டு ஊர்வலத்துடனும் தமிழர்களின் வீர விளையாட்டான சிலம்பாட்டத்துடனும் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். இதன்போது சுவாமி விபுலானந்தரின் உருவப்படங்கள் தாங்கிவரப்பட்டதுடன் சுவாமியின் வேடம் தாங்கி மாணவர்களின் ஊர்திப்பவனியும் இடம்பெற்றது.

விபுலானந்தரின் துறவற நூற்றாண்டை முன்னிட்டு நினைவு முத்திரையும் தபால் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.






விபுலானந்த அடிகள் என்கின்ற நூலும் வெளியிடப்பட்டதுடன் நினைவுப் பரிசும் விருந்தினர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது. கலை கலாச்சார நிகழ்வுகள் விழாவினை அலங்கரித்தன.

“வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது”

எனும் பாடலை இயற்றிய சுவாமியவர்கள் 19 ஆம் திகதி யூலை மாதம் 1947 இல் தனது 55 ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

# யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரது முன்மாதியான செயல்!



மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் கலொக் கணநாதன் உஷாந்தனால் மக்கள் பணம் மக்களுக்கே என்னும் செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மக்கள் பிரதிநிதி என்ற பதவிநிலை மூலம் கிடைக்கும் கொடுப்பனவு, வரப்பிரசாதம் எவற்றையும் பயன்படுத்த போவதில்லை என்ற தேர்தல் வாக்குறுதிக்கு அமைய அவற்றை மக்களுக்கு மீள வழங்குவதே அவரது இத் திட்டமாகும்.

அந்த வகையில் பிரதேச சபை முதல் மாதக் கொடுப்பனவுடன் தன் சொந்த பணத்தையும் சேர்த்து கட்டுடை விநாயகர் முன்பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த முன்பள்ளி நிர்வாகத்தின் வேண்டுகோளின்படி இவை 22 ஆம் திகதி செவ்வாய் கிழமை வழங்கி வைக்கப்பெற்றது.



# கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்றவர் சடலமாக மீட்பு!

கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த நபர் ஒருவர் 24ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதன்போது யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் இருந்து பி.மரியதாசன் (வயது 63) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபரின் மூன்று பிள்ளைகளும் மனைவியும் கனடாவில் உள்ளனர். இவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கனடாவில் இருந்து அவரது மச்சான் முறையானவருடன் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்தவேளை வியாழன் அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அன்று பிற்பகல் அவரது வீட்டுக்கு சென்ற மச்சான் அவர் சடலமாக இருப்பதை அவதானித்த நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாராருக்கு தகவல் வழங்கினார்.

அவரது சடலமானது மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது!

பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் 24ம் திகதி அன்றையதினம் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அரியாலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடியில் கடை ஒன்றினை உடைத்து 6 இலட்சம் ரூபா காசு, கேமரா சேமிப்பகம் என்பவற்றை திருடியமை, யாழில் கருவாட்டுக்கடை ஒன்றினை உடைத்து அங்கு திருடியமை, சாவகச்சேரியில் தொலைபேசி கடை ஒன்றினை உடைத்து 96 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் மற்றும் 2 கைபேசிகளை குறித்த சந்தேகநபர் திருடியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் இயங்கும், உப பொலிஸ் பரிசோதகர் திரு.மயூரன் தலைமையிலான குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது திருடப்பட்ட பல பொருட்களும் மீட்கப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தீர்த்தத் திருவிழா!

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தீர்த்தத்திருவிழா 24ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

அன்று அதிகாலை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராகவும், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இருந்து நகுலேஸ்வரர் சமேதர நகுலாம்பிகை, விநாயகர் மற்றும் முருகப்பொருமான் வள்ளி தெய்வயானையுடனும், கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து முத்துமாரி அம்மனும் எழுந்தருளி கீரிமலை புனித கண்டகி தீர்த்தத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தீர்த்தத்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது.



இதில் நூற்றுக்கணக்காணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். வெள்ளிக்கிழமை பூங்காவனம் இடம்பெறவுள்ளது.







# மன்னார் – நானாட்டான் பகுதியில் பட்ட பகலில் வீட்டில் புகுந்து கத்திமுனையில் தங்க நகைகள் கொள்ளை

இலங்கை செய்திகள் Sri Lanka News

kd;dhu; epUgu;

– எஸ்.ஆர்.லெம்பேட் (24 – 07 – 2025)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நானாட்டன் முருங்கன் வீதியில் வசித்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவரின் வீட்டில் புகுந்த முகமூடி திருடன் கத்தியை காட்டி மிரட்டி கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த சம்பவமானது 23ம் திகதி அன்றைய தினம் புதன் கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியை வீட்டில் தனிமையில் இருந்த போது பின் பக்க வேலியால் வீட்டுக்குள் புகுந்த திருடன் குறித்த வீட்டின் அருகில் வங்கிகளும் கடைகளும் இருந்த போதும் சத்தம் போடக் கூடாது என்று கத்தி முனையில் மிரட்டி ஆசிரியையின் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை கொள்ளையிட்டதுடன் குறித்த ஆசிரியை கையில் அணிந்திருந்த வளையல்களை கழற்ற முடியாமல் விட்டு திருடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் முருங்கன் பொலிஸார் வருகை தந்து சம்பவ இடங்களை பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

ஓய்வு பெற்ற ஆசிரியை யிடமிருந்து முகமூடித் திருடன் சுமார் 7 லட்சம் மதிப்புள்ள இரண்டரை(2-1/2) பவுன் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்து சென்றுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செம்மணி புதைகுழிக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் – பிரபல நடிகர் கருணாஸ் வேண்டுகோள்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

G. f[pe;jd;



எல்லா தேசங்களிலும் மண்ணைத் தோண்டினால் வளங்கள்தான் கிடைக்கும். ஆனால் ஈழதேசத்தில் மட்டும்தான் எங்கு தோண்டினாலும் பிணங்கள் கிடைக்கின்றன. இப்போது அந்தப் பிணங்கள் காலத்தின் கறையான் அரித்து எலும்புக் கூடுகளாய் மாறி ஈழத்தில் நிகழ்ந்து இனப் படுகொலைதான் என்பதை அடையாளம் காட்டுகிறது. செம்மணி மனிதப் புதைகுழியானது தமிழினப் படுகொலையின் சாட்சியாகும். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், செம்மணி புதைகுழிக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தென்னிந்திய பிரபல நடிகரும் முக்குலத்தோர் புலிப்படை கட்சியின் தலைவருமான சேது கருணாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இனப்படுகொலைக்கு செம்மணிதான் சாட்சி. இதற்கு முன்னால் எத்தனையோ இனப்படுகொலை சாட்சிகளைப் பன்னாட்டு அவையில் முன்னிறுத்தினோம். ஆனால் நீதிக்கு இடம் தராத ஐ.நா அவைகள் கள்ள மௌனம் காத்தது. இந்த செம்மணி அகழாய்வு உண்மையிலாவது, இனப்படுகொலையின் இன்னல்களை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளட்டும்.

செம்மணி மனித புதைக் குழி 2009 ஆம் ஆண்டிற்கு முன் நிகழ்ந்திருக்கிலாம். அல்லது பின் நிகழ்ந்திருக்கலாம். எப்போது நடந்தாலும், சிங்களவரால் நிகழ்த்தப்பட்டது. இனப்படுகொலைதான் என்பதற்கு செம்மணியும் மற்ற அகழாய்வுகளும் வெளிப்படுத்தியிருக்கிறது.

2009க்கு பின்னும் கூடுதலாய் அதே புதைகுழி உத்தியை சிங்கள பேரினவாத அரசு கையாண்டுள்ளது என்பதை இப்போது கூடுதலாய் வெளிப் பட்டிருக்கிறது. சமகாலத்தில் செம்மணியை விட சர்வதேச சமூகத்திற்கு வேறென்ன சான்று வேண்டும்.

இதுவரை 80க்கும் மேற்பட்ட அகழ்வாய்வு தொகுப்புகள் கிடைத்துள்ளன. எந்த நாட்டிலும் இதுபோல், அகழாய்வில் அதிர்ச்சியில்லை. தமிழர் அகழாய்வில் முன்னோர் வாழ்வியல் படித்துள்ளோம். ஆனால், தமிழீழ தேசத்தில்தான் எலும்புக் கூடுகளின் வலியை உணரமுடிகிறது.

தாயும், குழந்தையும் கட்டி அணைத்தபடி மடிந்த எலும்புக் கூடுகளின் காட்சி, காலம் கடந்தும் நம் காயங்களை.. மீண்டும் காயப்படுத்துகிறது.. பள்ளிச்சிறுவர்களின், புத்தகப் பை, பொம்மையோடு கண்டறிந்த அகழாய்வு. கொடுமையின் உச்சத்தை தொடுகிறது. எண்ணிலடங்கா எலும்புக் கூடுகளில் சிறுவர் சிறுமியர் அதிகம் என்பதை உலகம் கண்டுணரா அதிர்ச்சி.

வதைக்கப்பட்டும், புதைக்கப்பட்டும், வல்லுறவில் மறைக்கப்பட்டும் எத்தனைப் பெண்கள். அத்தனையும் செம்மணியில் எலும்புக்கூட்டின் சாட்சியங்கள். இன்னும் இலங்கை அகழாய்வு நீண்டாலும் கள்ள மௌனம் சாதிக்கும் இவ்வுலகம்.

நாம் சிங்கள பௌத்த பேரினத்தின் அநீதிகளை பன்னாட்டு அவையில் எடுத்துரைப்போம். மக்கள் திரள் போராட்டம் வழியாய் நமக்கான நீதிக்குக் குரல் கொடுப்போம்.

ஒன்றிய அரசு, அண்டை நாட்டில் நிகழ்ந்த அநீதிக்கு ஐ.நா அவைவில் குரல் கொடுக்க வேண்டும்!! இதற்கு முன் தமிழினத்திற்கு செய்ததை, செம்மணியை மனிதப் புதை குழி அறிந்தும் கண்டும் காணமல் இருக்கக் கூடாது.

தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் செம்மணி மனிதப் புதை குழி படுகொலைக்கு, சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, இலங்கை அரசை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டுகோள் விடுக்கவேண்டும் மேலும் ஒன்றிய அரசுக்கு அழுத்தும் கொடுக்கவேண்டும்.

செம்மணி நமது தமிழினப்படுகொலைக்கு சாட்சியத்திற்கு அடையாளம் ஆனாலும், இன்னும் இது போன்ற தோண்டப்படாத அகழாய்வுகள் இன்னும் எத்தனையோ உள்ளது. காலம் ஈழத் தமிழனத்திற்கு நல்ல தீர்ப்புகள் வழங்கும்.. நாம் தொடர்ந்து போராடுவோம் என குறிப்பிடப்பட்டுள்ளார்.

# மாகாண மட்ட ரீதியாக நடைபெற்ற உடற்கல்வி போட்டியில் யாழ்ப்பாணத்தில் முதலிடம் பெற்ற ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி!




இந்த ஆண்டுக்கான மாகாண மட்ட ரீதியிலான உடற்பயிற்சி போட்டியானது மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது தீவக வலயத்திற்குட்பட்ட ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியானது இவ்வருடம் நடைபெற்ற மாகாண மட்ட ரீதியிலான உடற்பயிற்சி போட்டியில் முதலிடத்தை பெற்றுள்ளது.

மேலும் இரண்டாவது இடத்தை இளவாலை ஹென்றிஸ் கல்லூரியும் மூன்றாவது இடத்தை வசாவிளான் மத்திய கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

# வடமராட்சி பிரதேச சபையில் செம்மணி மனிதப் புதைகுழியை ஐ.நா பேரவையின் நிபுணர் குழு மேற்பார்வை செய்ய வலியுறுத்தி பிரேரணை



செம்மணிக்கு நீதி கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் கோரிக்கைகளை வலுப்படுத்துவதற்காக வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையில் சபை அமர்வு 23ம் திகதியன்று புதன்கிழமை காலை 9.00 மணியளவில் தவிசாளர் கு. சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் கோரிக்கைகளை வலுப்படுத்தும் விதமாக தவிசாளர்னால் முன் மொழிவு மேற்கொள்ளப்பட்டது.

1) செம்மணி உள்ளிட்ட மனித புதைகுழி தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்பு கூறல் செயல் திட்ட அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியான உள்ளீட்டை வழங்கவும் காணிப்பில் ஈடுபடவும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்

2) ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 46.·.1 தீர்மானத்திற்கு அமைய இனப்படுகொலை யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தில் கீழியங்கும் இலங்கை பொறுப்பு கூறல் செயல் திட்ட அதிகாரிகள் தங்கு தடையற்ற வசதிகளை அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும்.

3) மனித புதைகுழி அகழ்வில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தமது சமூகத்தின் வளங்களை பெற்று அதன் மூலம் சுதந்திரமான தொழில்நுட்ப உள்ளீட்டை பெற்றுக் கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதிக்குமாறு அழுத்தம் வழங்கப்பட வேண்டும்.

4) புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பில் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றதால் கோரப்படும் அனைத்து நிதிக் கோரிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

5) இதுவரை வெளிவந்த தகவல்களின் பிரகாரம் அனைத்து புதைகுழிகளிலும் சர்வதேச கண்காணிப்புடனான அகழ்விற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

6) இலங்கையில் பொறுப்பு கூறல் விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஊடாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு விடயம் பாரபடுத்தப்பட்டு அதன் ஊடாக சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றை சாத்தியப்படுத்துவதற்கான வேலைப்பாட்டை ஐ.நா மனித உரிமை ஆணையாளர், எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் முடுக்கி விட வேண்டும் என தவிசாளர் முன்மொழிவை முன் வைத்தார். இதனை உறுப்பினர் கந்தன் பரஞ்சோதி வழி மொழிய சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதே வேளை தேசிய மக்கள் சக்தியின் பிரதேசசபை உறுப்பினர் பா.அஜந்தன் தெரிவிக்கையில் மக்களின் கஷ்டங்கள் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இது பிரேரணையின் முதலாவதாக போட்டிருக்க வேண்டும். ஆனால் 18 ஆவது பிரேரணையாக போட்டிருக்கின்றது. இதனை முதலாவது பிரேரணையாக கொண்டு வந்து பதிவு செய்யப்பட வேண்டும். நமது பிரதேச சபை ஆவணத்திலும் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்தார்.

# Grand Opening Ceremony of newly expanded Medical Centre of Medcentre Health in Scarborough.

## புதிதாக விஸ்தரிக்கப்பெற்ற ஸ்காபுறோ Medcentre Health அவசர மருத்துவ நிலையத்தின் திறப்பு விழா




ஸ்காபுறோ நகரில் நீண்ட காலமாக மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்புக்கு அருகாமையில் இயங்கிவந்த **Medcentre Health** அவசர சிகிச்சை வைத்திய நிலையம் தற்போது புதிதாக விஸ்தரிக்கப்பெற்று அதன் திறப்பு விழா கடந்த 18-07-2025 வெள்ளிக்கிழமையன்று ஸ்காபுறோவில் 2225 **Markham Road- (Ground Floor) Scarborough> Ontario** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள விசாலமான இடத்தில் திறந்து வைக்கப்பெற்றது.

டாக்டர் செந்தில்மோகன் அவர்களது தலைமையின் கீழ் இயங்கிவரும் இந்த அவசர வைத்திய சிகிச்சை நிலையம் ஏற்கெனவே பல்லின மக்கள் மத்தியில் நற்பெயரைப் பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி **Medcentre Health** அவசர மருத்துவ நிலையத்தின் திறப்பு விழாவில் ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார அமைச்சின் இணையமைச்சரும் ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் மற்றும் அமைச்சர் ரேமன்ட் சோ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள். பலவேறு ஊடகவியலாளர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

நவீன வசதிகள் பல கொண்டவையாக விளங்கு இந்த அவசர சிகிச்சை நிலையத்தில் மருந்துச் சாலையும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வைத்திய சிகிச்சை நிலையத்தில் உள்ள **Medcentre Urgent Care** மற்றும் **Medcentre Women's Health Care** ஆகிய பிரிவுகள் சிறப்பான வைத்திய உபகரணங்களையும் பரிசோதனைக் கருவிகளையும் கொண்டது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

2225 **Markham Road- (Ground Floor) Scarborough, Ontario** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள இந்த வைத்திய நிலையத்தில் அவசர சிகிச்சை பெற 24 மணி நேரமும் 416 297 7777 என்னும் இலக்கத்தை அழைக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை டாக்டர் செந்தில்மோகன் அவர்களை வாழ்த்துவதற்கு 416 357 7714 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## தமிழர்களின் கறைபடிந்த நாளில் தேசிய மக்கள் சக்தி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் குத்தாட்டம் — பல்வேறு தரப்பினரும் விசனம்!

தமிழர்களின் கறைபடிந்த நாளில் தேசிய மக்கள் சக்தி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் குத்தாட்டம் போட்டு நடனமாடியதால் பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தமிழர்களின் கறை படிந்த நாளான ஜூலை 23ஆம் திகதியான இன்று தென் இலங்கையில் இருந்து புகையிரதம் மூலம் சகோதரத்துவம் எனக் கூறி வந்த அமைச்சர் யாழ்ப்பாணத்தில் குத்தாட்டம் போடும் காட்சிகளை தனது முகநூலில் பதிவேற்றியுள்ளார்.



குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, அன்றைய தினம் ஜூலை 23 ல் சகோதரத்துவ நாளாக தேசிய மக்கள் சக்தியின் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகரா தலைமையில் கொழும்பிலிருந்து புகையிரதம் மூலம் பெரும்பான்மை இன மக்கள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர்.

ஒற்றுமையாய் வாழ்வோம் சகோதராய் வாழ்வோம் என கூறி புகையிரத மூலம் அழைத்து வரப்பட்ட நபர்களுடன் யாழ். நகரப் பகுதி ஒன்றில் அமைச்சர் குத்தாட்டம் போடுவது தமிழ் மக்களின் உணர்வுகளை புண்படுத்துவதாக அமையும் என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஜூலை 23 தமிழர்கள் வாழ்வில் அழிக்க முடியாத கறை படிந்த நாளாக பார்க்கப்படுகின்ற நிலையில் சகோதரத்துவம் என கூறி மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாது குத்தாட்டம் போடுவது ஏற்புடையதல்ல என பல்வேறு தரப்பினரும் கருத்துரைத்து வருகின்றனர்.



கனடிய செய்திகள்
Canadian News

## கனடா தமிழ்க் கவிஞர் கழகம் சிறப்புற நடத்திய "விருது விழா-2025"

கனடாவில் நீண்டட காலமாக நேர்த்தியாக இயங்கிவரும் கனடா தமிழ்க் கவிஞர் கழகம் சிறப்புற நடத்திய "விருது விழா - 2025" 19-07-2025 அன்று சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத்தின் தலைவர் பாவலர் கணபதிப்பிள்ளை குமரகுரு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவை கவிஞரும் எழுத்தாளரும் பொறியியலாளருமான அகணி சுரேஸ் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

அன்றைய விழாவில் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்-கவியாசான் பாவலர் சி. சண்முகராஜா - பாவலர் கந்த ஸ்ரீபஞ்சநாதன்- பாவலர் பவானி தர்மகுலசிங்கம் ஆகிய நான்கு கவிஞர்களுக்கு இவ்வருடத்திற்குரிய விருதுகள் வழங்கப்பெற்றன.

வாழும்போதே வாழ்த்துவோம்! என்ற தொனிப்பொருளுக்கு அமைய கனடா தமிழ்க் கவிஞர் கழகம் சிறப்புற நடத்திய இந்த விருது விழாவில் கலை இலக்கிய மற்றும் வாசகப் பெருமக்கள் என பலர் கலந்து சபையை அலங்கரித்தனர்.

தலைமையுரையாற்றிய பாவலர் கணபதிப்பிள்ளை குமரகுரு அவர்களது உரை சிறப்பாக அமைந்திருந்தது. படைப்பிலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டு செயற்படுபவர்கள் அதன் தொடர்ச்சியான பலனையும் அதன் மூலம் உற்சாகத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள் என்ற கருத்துக்ளை உள்ளடக்கிய சிறப்பான உரையை ஆற்றினார். தொடர்ந்து வாழ்த்துரைகளை வழங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரம்- "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன், "உதயன்" லோகேந்திரலிங்கம், மற்றும் கவிஞர் சயந்தன் ஆகியோர் விருது பெறுகின்றவர்களையும் கவிதை போன்ற இலக்கியப் படைப்புக்களை மக்களுக்காய் படைப்பவர்களையும் பாராட்டும் வகையில் உரையாற்றினார்கள்.

வாழ்த்துரையின் போது "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்கள் விழாத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையானது ஒரு அரசவையில் பண்டைய மன்னர் காலத்துப் புலவர்களான கம்பனையும் இளங்கோவையும் பாராட்டி ஏனைய புலவர் பெருமக்கள் ஆற்றும் உரைபோல அமைந்தது என்று பாராட்டிச் சென்றார்.

விருதுகளைப் பெற்ற ஒவ்வொரு கவிஞரையும் வாழ்த்தியும் பாராட்டியும் விருது வழங்கும் வகையில் கனடாவில் எம்மத்தியில் கலை இலக்கியப் பரப்பில் தீவிரமாகவும் அர்ப்பணிப்போடும் பணியாற்றியும் பங்களித்தும் வரும் இலக்கியவாதிகள் பலர் மேடைக்கு அழைக்கபெற்று தங்கள் பணியை செய்தனர்.

கனடாவில் படைப்பிலக்கிய வடிவங்களில் மேன்மையுடையதாக கவிதைத் துறையை மேம்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக கவிதை இலக்கண வகுப்புக்களையும் நடத்திவரும் கனடாக் கவிஞர் கழகத்தின் இருப்பு எமக்கு மிக அவசியம் என்பதையும் இந்த விருது வழங்கும் விழா உணர்த்தியது என்றால் அது மிகையாகாது.


- சத்தியன்















# இவ்வார ராசிபலன்

**25 — 07 — 2025 வெள்ளி தொடக்கம் 31 — 07 — 2025 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் "ராஜயோகம்"
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091 — 9840160068




மேஷம்: கவலைகள் ஒழியும் வாரம். விளையாட்டுத்துறையில் வெற்றி கிடைக்கும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். நண்பர்களால் உதவி உண்டு. கடன் பிரச்சனைகள் அகலும். தகுதிகள் உயரும். புதிய எண்ணம் உருவாகும். பெருமிதம் நிறைந்த காலம். பூமியால் லாபம் உண்டு. கல்வியில் ஆர்வம் உண்டு. மங்களச் செய்தி வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளை வழி செலவுகள் கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மனோ தைரியம் அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவங்கள் போகும். புத்தி சாதுர்யம் கூடும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைகள் தீரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வெறுப்புக்கள் அகலும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். திருப்திகள் பெருகும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வியாபாரம் செழிக்கும். மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்பட்டு விலகும். காதல் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்'ட எண்: 8,5,4,1
அதிர்'ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்'ட எழுத்துக்கள்: **S,V**




ரிஷபம்: ஆரோக்கியம் சீராகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. மனஅமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் திருப்தி தரும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோ'ம் மனதில் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உறவுகளால் செலவுகள் கூடும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. மனநிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். கர்மவினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வார்த்தைகளில் நிதானம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சகோதர வழியில் சகாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன், அதிர்'ட எண்: 9,5,4,3
அதிர்'ட நிறம்: வெண்பட்டு, அதிர்'ட எழுத்துக்கள்: **S,Q**




மிதுனம்: வீண் விரயங்கள் குறையும் வாரம். முன்கோபத்தை குறைக்கவும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் கிடைக்கும். உற்சாகம் அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அரசு வழியில் கவனம் தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பணநடமாட்டம் கூடும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் மேம்படும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். துன்பங்கள் அகலும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். ல'மி கடாட்'ம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகன்னியம்மன், அதிர்'ட எண்: 8,4,1,3
அதிர்'ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **G,E**




கடகம்: புகழும், புண்ணியமும் சேரும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வேண்டிய வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். சேமிப்பு வளரும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். புண்ணியம் சேரும் காலம். ஆன்மீக ஈடுபாடு கூடும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். உடல்நலம் சீராகும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணவரவு கூடும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். ஒரு சிலருக்கு கௌரவப் பதவி தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். செய்த்தொழில் சிறக்கும். பணநடமாட்டம் கூடும். களவுப்போன பொருள் கிடைக்கும். ஆடம்பரச் செலவுகள் கூடும். உயர்வு பெறும் காலம். திடீர் செலவு ஏற்படும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்'ட எண்: 6,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்'ட எழுத்துக்கள்: **T,R**




சிம்மம்: தொட்டது துலங்கும் வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். க'ட காலம் மறையும். சோதனைகள் நீங்கும். கடல் கடந்தப் பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். மேன்மையான எண்ணம் உருவாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெருகும். விவேகம் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர் குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்'ட எண்: 4,7,6,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்'ட எழுத்துக்கள்: **L,J**




கன்னி: செல்வாக்கு பெருகும் வாரம். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. எண்ணங்கள் மாறுப்படும். தனவரவு தடைப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்திகள் வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். வெளியூர் பயணம் நன்மை தரும். நண்பர்களால் நன்மை கூடும். உடல் வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பூர்வீகச் சொத்து கிட்டும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். குடும்ப பாசம் அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் தொல்லை நீங்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைக்கூடும். மன சந்தோ'ம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்'ட எண்: 3,5,7,9
அதிர்'ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்'ட எழுத்துக்கள்: **H,D**





துலாம்: இனிப்பானச் செய்திகள் வரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றிபெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். சந்தோ'ம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பதவி உயர்வு தாமதமாகும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். வாகனச்செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி உறவில் தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவர். வேண்டும் வரம் கிட்டும். பெருமைகள் சேரும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்'ட எண்: 5,1,2,9
அதிர்ஷ்'ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்'ட எழுத்துக்கள்: **P,U**

(தொடர்ச்சி 24 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1156

## சீதாஎலிய, சீதையம்மன் ஆலயம் நுவரெலியா

*“ நோயும் நொடியும் பேயும் பிணியும் நீக்கும் ராமஜெயம்
நோக்கம் இல்லா வாழ்வை கூட மாற்றும் ராமஜெயம்
தீயும் உன்னைத் தீண்டும்போது சொல்வாய் ராமஜெயம்
தேகம் எங்கும் பன்னீர்தூவி காக்கும் ராமஜெயம். ”*

பூவுலகில் பண்பாடே வடிவெடுத்துள்ள இலக்கியங்களுள், இராமாயணம் தலைசிறந்ததாகத் திகழ்கின்றது. இது உருவெடுத்தது இந்தியாவில் எனினும், மானுடவர்க்கம் முழுவதின் மனதைக் கவரவல்லதாகக் காணப்படுகின்றது. நலம், கேடு இரண்டையும் உள்ளடக்கியதே வாழ்க்கை. இவ்விரண்டிற்கும்மிடையேயான போராட்டமே இராமயணமெங்கும் பரவிக்கிடக்கின்றது. எதிரி இல்லாத ஜெந்து உலகிலே இல்லை. எதிரியைச் சமாளிப்பது பலகோணங்களிலும் வாழ்க்கைப் பிரச்சினையாகவே இருக்கின்றது. அதேவேளை எதிரியைச் சமாளிப்பது வாழ்க்கைப் பயிற்சியாகவும் காணப்படுகின்றது. வலிவு படைத்ததே வாழ்க்குரிய தகுதியாகக் காணப்படுகின்றது. வலிவைப் பெறுவதும், எதிரியைச் சமாளிப்பதும் இராமாயணம் புகட்டும் பாடங்கள்.

அறநெறி காப்பவனுக்கு வாழ்க்கையில் சோதனைகள் அதிகம். இவற்றை தர்மநெறியில் நின்று சமாளிப்பவன் வெற்றியடைகின்றான். இதுவும் இராமாயணம் புகட்டும் பாடம். காமமும் பொருளாசையும் மனிதனைத் தீயவழியிலே செல்லத் தூண்டுகின்றன. இவற்றுள் காமத்தை அடிப்படையாகக் கொண்டு அழிந்தவனின் வாழ்க்கையை இராமாயணம் வெளிக்காட்டுகின்றது.

காலச்சக்கரம் சதா சுழன்றுகொண்டிருக்கின்றது. அதில் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டே இருக்கின்றன. இப்பொழுது நடப்பது கலியுகம். பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் திரேதா யுகத்தில் இராமாயணம் நிகழ்ந்தது. இதன் வரலாற்றையே வால்மீகி, இராமாயணமாக எடுத்துரைத்தார்.

அழிவற்ற இந்நூல் ஸ்ரீராமன் என்னும் மூர்த்தியை நடுநாயகமாகக் கொண்டுள்ளது. ஆகையினால் இது இராமாயணம் எனப் பெயர் பெற்றது. ராமசரிதம் என்பது இதன்பொருள்.

இளைஞர்களுக்கும், முதியோர்களுக்கும் உலக வாழ்வில் ஈடுபட்டுள்ளோருக்கும், ஆத்மஞானத்தில் திளைத்திருப்போருக்கும் ஸ்ரீராமன் முன்மாதிரியாகத் திகழ்கின்றான். அறநெறியே வடிவெடுத்தவன். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அறத்தைக் கடைப்பிடிப்பவனாகக் காணப்படுகின்றான். இராமன் ஏகபத்தினிவிரதம் பூண்டிருந்தான். இராமனும் சீதையும் நெடுங்காலம் தவத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இராமனுக்கேற்ற கற்பு வாய்ந்த மனைவி சீதை. சீதை என்னும் சொல் படைசால் எனப் பொருள்படும். இச்சிறுமிக்குப் பெற்றோர் இல்லை. பூமகளின் செல்வியாக படைசாலில் இவள் கண்டெடுக்கப்பட்டு, ஜனக மகாராஜாவினால் வளர்க்கப்பட்டாள். சீதை புனிதத்திற்கும், பெண்மைக்கும் உறைவிடமாக உள்ளாள். சகிப்புத்தன்மைகாரணமாக அவள் தனக்கு ஏற்பட்ட மலைபோல்வந்த துன்பங்களை வென்றவளாக விளங்கினாள். பெண்மையின் பண்புகளுக்குச் சிகரமாகச் சீதை காணப்பட்டாள்.

இராமன் பதின்நான்கு வருடங்கள் காடேகவேண்டும் என்ற தசரதன் பணிப்பிற்கேற்ப, இராமனுடன் லக்ʻமணனும், சீதையும் செல்கின்றார்கள். பல ஆச்சிரமங்களைத் தரிசித்து இறுதியில் பஞ்சவடிக்குப் போய் சேர்கிறார்கள். விதியின்பயனாக பொய்மானிடம் மனதைப் பறிகொடுத்த சீதை, அதனைப்பிடித்துத்தரும்படி இராமனிடம் வேண்ட, இராமன் அதன் பின்னால் சென்றதும், அதனைத் தொடர்ந்து இலக்குமணன் சென்றதும் விதிவசத்தால் ஏற்பட்டவை.

இந்நிலையில் இராவணனின் தங்கை சூர்ப்பனகைக்கு ஏற்பட்ட அவமானமும், சீதையின் அழகும், இராவணன் சீதையைக் கவரக் காரணமாயிற்று. சீதையைக் கவர்ந்து சென்ற இலங்கை வேந்தனாகிய இராவணன், சீதையை அசோகவனத்திலே சிறைவைக்கின்றான். சீதையைக் கவர இராவணன்கூறிய சொற்களோ, அவனுடைய ஆடம்பரவ வாழ்க்கை வசதிகளோ சீதை மனம்மாற உதவவில்லை. இந்நிலையிலே என்றோ ஒருநாள் இராமன் தன்னைத் தேடி வருவான் என்ற உணர்வோடு பத்தினிவிரதம் காத்து, அசோகவனத்திலே சீதை சிறை இருந்தாள்.

இவ்வாறான நிலையிலே இராமபக்த அனுமானால் சீதையின் இருப்பிடம் காணப்பட்டு, சீதையை மீட்க இராம இராவணயுத்தம் நடைபெறுகின்றது. வரலாறுகளில் நடப்பதுபோல இராவணன் தம்பி விபீடணன், இராமனுடன் இணைந்து கொள்கின்றான். பலநாள் நடைபெற்ற யுத்தத்தின்பின் இராவணனும், அவனது வம்சமும் இராமனால் அடியோடு அழிக்கப்பட்டு இலங்கை இராச்சியம் விபீடணனிடம் கொடுக்கப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்களின் பின் சீதை சிறைமீட்கப்பட்டு இராமனின் சந்நிதானத்திற்கு அழைத்துச் செல்கின்றார்கள். எந்த மாதரசியால் யுத்தம் ஏற்பட்டதோ, அந்த யுத்தத்தின் வெற்றி, அந்த மாதரசியைமீட்டபின்பும் இராமன் முகத்திலே காணப்படவில்லை. இதன்பின் நிகழ்ந்த நிகழ்வுகளே சீதாபிராட்டியாரைத் தெய்வநிலைக்கு உயர்த்தியது. இலங்கையிலே நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற சீதாஎலிய என்ற இடத்திலே சீதையம்மன் என்ற பெயரில் கோயில் எழுப்பி, மக்கள் அவரைத் தெய்வமாக வழிபட வகை செய்தது.

வளரும்...

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
Cr436,187,279,382,231,342,460,522,251,365,611,602,233,304,356,533,534,568,453,
182,509,536, 176,555,115,234,376,431,460,258

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8



# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




விருச்சிகம்: தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். காரிய வெற்றி தரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். மனக்குழப்பம் தீரும். புதிய கடன் வாங்க நேரிடும். தேக பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. சுபகாரியம் கைகூடும். சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். வியாபாரம் வெற்றி தரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. புத்திரர் வகையில் சந்தோ'ம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். அவமானங்கள் அகலும். போட்டிகள் உருவாகும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். தொட்ட காரியம் ஜெயமாகும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின்
வாட்டம் குறையும். பெருமை மிக்க காலமாக அமையும். பொருளாதார நிலை உயரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மன அமைதி கிடைக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பணியாட்கள் ஆதரவு பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்'ட எண்: 6,9,7,1
அதிஷ்'ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்'ட எழுத்துக்கள்: **Y,N**




தனுசு: பதவி உயர்வு கிடைக்கும் வாரம். நல்ல செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். எதிரிகளின் தொல்லை குறையும். பணத்தேவை அதிகரிக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களுக்கு பெருமை சேரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். நலம் காணும் காலம். நிர்வாகச் செலவு ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் வெற்றி தரும். உடல் உ'ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்யம் மி-ளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மன பயம் ஏற்படும். முத்தான வாய்ப்பு பெருகும். படிப்பில் கவனம் தேவை. உடல் அசதி உண்டாகும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையாகும். வேலை பளு குறையும். மாற்றங்களை சந்திப்பீர்கள். புதிய முயற்சி பலன் தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் தரும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைபேசி
செய்தி ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பொறுமையைக் கையாள வேண்டும். இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. சொல்லில் கவனம் தேவை. அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்பார்ப்புக்கள் கூடும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. தந்தையால் நலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்'ட எண்: 1,4,9,6
அதிஷ்'ட நிறம்: அரக்கு, அதிர்'ட எழுத்துக்கள்: **R,Q**




மகரம்: மனதில் மகிழ்ச்சி ஏற்படும் வாரம். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மையுண்டு. குடும்ப தேவை அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டு. பயணம் தடைப்படும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும். எதிர்பாராத செலவு ஏற்படும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் ஏற்படும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். விவசாயிகள் பயன் பெறுவர். உடல் உ'ணம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். கல்வித்தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும் பொறாமைகள் விலகும். வெகுமானம் உண்டு. பொருள் சேர்க்கையுண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கூடும். வறுமைகள் அகலும். நன்மைகள் பெருகும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். சகோதரியால் லாபம் உண்டு. சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூத வழிபாடு, அதிர்'ட எண்: 6,9,8,1
அதிஷ்'ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்'ட எழுத்துக்கள்: **F,C**




கும்பம்: சாதனை படைக்கும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோ'மான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். வேண்டாத வி'யங்கள் விலகும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோ பயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லை உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டு. வியாபாரத்தில் நன்மை உண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியும், மனஅமைதியும் கூடும். கடன் கச்சைகள் தீரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். முயற்சிகள் அதிகம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியம் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். நன்மைகள் நாடி வரும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். சட்டம் சாதகமாகும். பட்டம் பதவி தேடி வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்'ட எண்: 1,5,3,9
அதிஷ்'ட நிறம்: வெண்பட்டு, அதிர்'ட எழுத்துக்கள்: **L,H**




மீனம்: உதவி கிட்டும் வாரம். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை உயரும். கடன் தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிட தொழில் லாபம் தரும். ே'ர் மார்க்கெட்டில் லாபம் கூடும். மற்றவர்களிடத்தில் மரிய-ாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புதமான காலம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. முன்கோபத்தை குறைக்க வேண்டும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பக்குவமான பேச்சு பயன் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். புதிய முதலீடு லாபம் தரும். தேக ஆரோக்கியம் சீராகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். தொல்லைகள் ஒழியும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் உண்டு. சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். ஆதாயம் பெருகும் காலம். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக் கூடி வரும். பொறியியல் துறை லாபம் தரும். புதிய சிந்தனை உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்'ட எண்: 3,5,9,1
அதிஷ்'ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்'ட எழுத்துக்கள்: **U,Q**

# மன்னாரில் "ரைட் டு லைப்" நிறுவனத்தின் ஏற்பாட்டில் கலந்துரையாடல்

## மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சுயதொழில் முனைவோர், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் பங்கேற்பு

**— எஸ்.ஆர்.லெம்பேட் (21 — 07 — 2025)**



ரைட் டு லைப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சுயதொழில் முனைவோர் மற்றும் ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகளுக்கான சிறப்பு கலந்துரையாடல் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு எதிர்வரும் காலங்களில் மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் ஊடாக செய்யவிருக்கும் செயற்பாடுகள் மற்றும் சுய முயற்சியாளர்களை ஊக்குவித்தல், ஊடகவியலாளர்களுடன் இணைந்து சமூக செயற்பாட்டாளர்களை இணைத்து செயல்பாடுகளை செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் ஊடாக இணைந்து செயல்படும் சட்டத்தரணிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் அனைவரையும் இணைத்துக் கொண்டு சுயதொழில் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான பல விடயங்களை மேற்கொள்வதற்கான ஒரு ஆயத்த ஆலோசனை நிகழ்வாக இது இடம் பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ரைட்டு லைப் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி பிலிப் திஸ்ஸாநாயக்க, சட்டத்தரணி துலான் , திட்ட இணைப்பாளர்கள் துனித் மற்றும் பிரசாந்தன், மன்னார் மாவட்ட முதலுதவி மையத்தின் இணைப்பாளர் டிலக்சன் மற்றும் மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் பிரதான பங்காளர்களான சுய தொழில் முயற்சியாளர்கள், ஊடகவியலாளர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND

INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

# NESAN
## 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8









26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்






உதயம் 1529 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 25, 2025

## மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆதரவாளர் மற்றும் நண்பர்கள் ஒன்றுகூடல்

ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் மார்க்கம்-தோர்ண்ஹில் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆதரவாளர் மற்றும் நண்பர்கள் ஒன்றுகூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை 20ம் திகதி மாலை தொடக்கம் மார்க்கம் நகரில் உள்ள திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது .மேற்படி ஒன்று கூடலில் நூற்றுக்கணக்கானவர்கள் பல்லின மக்களைப் பிரதிநிதித்துவம் செய்த வண்ணம் ஆர்வத்துடன் கலந்து சிறப்பித்தனர் குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தில் அங்கம் வகிக்கும் மூன்று முக்கிய அமைச்சர்களும் அங்கு கலந்து சிறப்பித்தனர். குலை நிகழ்ச்சிகளும் உரைகளும் உணவு வகை பரிமாறலும் இடம்பெற்ற இந்த நிகழ்வை அனைவரையும் குதூகலத்தில் ஆழ்த்தியது என்றால் அது மிகையாகாது.அங்கு கலந்து சிறப்பித்த அமைச்சர்கள் அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் மக்கள் சேவையைப் பாராட்டிச் சென்றார்கள்.



## Grand Opening Ceremony of newly expanded Medical Centre of Medcentre Health in Scarborough.

## புதிதாக விஸ்தரிக்கப்பெற்ற ஸ்காபுறோ Medcentre Health அவசர மருத்துவ நிலையத்தின் திறப்பு விழா



ஸ்காபுறோ நகரில் நீண்ட காலமாக மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்புக்கு அருகாமையில் இயங்கிவந்த **Medcentre Health** அவசர சிகிச்சை வைத்திய நிலையம் தற்போது புதிதாக விஸ்தரிக்கப்பெற்று அதன் திறப்பு விழா கடந்த 18-07-2025 வெள்ளிக்கிழமையன்று ஸ்காபுறோவில் 2225 **Markham Road-(Ground Floor) Scarborough, Ontario** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள விசாலமான இடத்தில் திறந்து வைக்கப்பெற்றது. மேற்படி சிகிச்சை நிலையத்தை டாக்டர் செந்தில்மோகன் அவர்கள் புதல்வர் நீலன் செந்தில்மோகன் திறந்து வைக்க மருந்தகத்தை இணையமைச்சர் விஜய் தணிகாசலம் திறந்து வைத்தார். டாக்டர் செந்தில்மோகன் அவர்களது தலைமையின் கீழ் இயங்கிவரும் இந்த அவசர வைத்திய சிகிச்சை நிலையம் ஏற்கெனவே பல்லின மக்கள் மத்தியில் நற்பெயரைப் பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
(தொடர்ச்சி 23ம் பக்கம்)

## கனடா – கோர்ன்வோல் நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் 23ம் திகதி புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.



கனடா-கோர்ன்வோல் நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் 23ம் திகதி புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. கோர்ன்வோல் - மொன்றியால் மற்றும் ரொறன்ரொ பெரும்பாகம்- பிரம்ரன் ஆகிய நகரங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு வருகை தந்து பக்திபூர்வமாக இரதோற்சவத்தைக் கண்டு களித்தார்கள்.

இரதோற்சவம் நான்கு வீதிகளிலும் பவனி வந்தபோது காவடி எடுப்பவர்களும் பிரதட்டை செய்த அடியார்களும் உணர்வுபூர்வமாக தங்கள் நேர்த்திக்கடனைகளை அனுஸ்டித்த தருணத்தில் வானத்திலிருந்து ஹெலிகெப்டர் ஒன்றிலிருந்து மலர்கள் தூவப்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.






## கனடா தமிழ்க் கவிஞர் கழகம் சிறப்புற நடத்திய "விருது விழா – 2025



கனடாவில் நீண்டட காலமாக நேர்த்தியாக இயங்கிவரும் கனடா தமிழ்க் கவிஞர் கழகம் சிறப்புற நடத்திய “விருது விழா-2025- 19-07-2025 அன்று சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத்தின் தலைவர் பாவலர் கணபதிப்பிள்ளை குமரகுரு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவை கவிஞரும் எழுத்தாளரும் பொறியியலாளருமான அகணி சுரேஸ் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

அன்றைய விழாவில் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்-கவியாசான் பாவலர் சி. சண்முகராஜா-பாவலர் கந்த ஸ்ரீபஞ்சநாதன்-பாவலர் பவானி தர்மகுலசிங்கம் ஆகிய நான்கு கவிஞர்களுக்கு இவ்வருடத்திற்குரிய விருதுகள் வழங்கப்பெற்றன. (தொடர்ச்சி 23ம் பக்கம்)